வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 25.01.2024 வியாழக்கிழமை இதழ் : 25 பக்கங்கள் : 12




# நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம் 46 வாக்குகளால் நிறைவேறியது!

## ஆதரவாக 108, எதிராக 62

கொழும்பு, ஜனவரி 25

எதிர்க்கட்சிகள், பொதுமக்கள் மற்றும் பொது அமைப்புகளின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலம் நேற்று புதன்கிழமை பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

இணையத்தள பாதுகாப்பு தொடர்பான சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு 46 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டதாக நேற்று சபாநாயகர் அறிவித்தார்.

நிகழ்நிலை பாது காப்புச் சட்டத்தை பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் நேற்றுமுன்தினம் சபையில் சமர்ப்பித்தார். இந்த சட்டமூலத்தின் மீதான விவாதம் கோரப்பட்டது. விவாதத்தை நடத்துவது தொடர்பாக நடத்தப்பட்ட வாக்கெடுப்பில், 33 மேலதிக வாக்குகளால் விவாதம் கோரப்பட்டது.

இதைத் தொடர்ந்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமையும் நேற்று புதன்கிழமையும் விவாதம் நடைபெற்றது. நேற்றைய தினம் விவாதத்தின் நிறைவில் எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல சட்ட மூலத்தை நிறைவேற்ற வாக்கெடுப்பைக் கோரினார்.

இதனையடுத்து இடம்பெற்ற 11



## கிளிநொச்சியில் விபத்து; பெண் பலி; எண்மர் காயம்!

### நேற்று அதிகாலை சம்பவம் ஒன்பது மாடுகளும் உயிரிழப்பு

யாழ்ப்பாணம் ஜன. 25

கணவரையும் மகனையும் வெளிநாட்டுக்கு அனுப்பிவிட்டு ஹைஏஸ் வானில் யாழ்ப்பாணம் திரும்பிக் கொண்டிருந்த பெண் விபத்தில் உயிரிழந்தார். மேலும், 8 பேர் காயங்களுக்கு உள்ளாகினர். இதில் 5 பேர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நேற்று அதிகாலை 4.30 மணியளவில் ஏ-9 வீதியில் - கிளிநொச்சி - ஆனையிறவு - உமையாள்புரம் பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றது. இதில், பாஷையூரைச் சேர்ந்த யாழ். சென்ஜோண் பொஸ்கோ வித்தியாலய ஆசிரியையான மார்க் 11

## விடுதலை கூட்டணியின் தலைவராக ரட்ணஜீவன்?

யாழ்ப்பாணம், ஜன. 25

தமிழர் விடுதலை கூட்டணியின் தலைவராக ரட்ணஜீவன் கூலை நியமிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக அந்த கட்சியின் செயலாளர் வீ. ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

"இலங்கை தமிழ்அரசு கட்சி வட்டக்கச்சி கட்சியாக மாறிவிட்டது. எமது கட்சி உலகளாவிய கட்சி. கட் சிக்கு புது இரத்தம் பாய்ச்சும் முயற்சிகள் நடந்து வருகின்றன. விரைவில் தேசிய மாநாடு 11

## பல்லாயிரம் பக்தர்களின் பங்கேற்புடன் நயினை அம்மனுக்கு கும்பாபிஷேகம்!

யாழ்ப்பாணம், ஜன.25

பல்லாயிரக்கணக்கான பக்தர்களின் அரோகரா கோஷம் விண்ணை எட்ட வரலாற்று பிரசித்தி பெற்ற நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய மகா கும்பாபிஷேகம் வெகு சிறப்பாக நடைபெற்றுள்ளது.

நேற்று புதன்கிழமை அதிகாலை 5 மணிக்கு ஓம குண்ட கிரியைகளுடன் மகா 11



## யாழ்.பல்கலையில் சட்ட மாநாடு!

யாழ்ப்பாணம்,ஜன. 25

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் சட்டத்துறை நாளை மறுதினம் சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் சட்ட மாநாடு ஒன்றை நடத்துகின்றது. இந்தியாவின் புகழ்பெற்ற சுரனா மற்றும் சுரனா சர்வதேச வழக்கறிஞர்கள் நிறுவனத்துடன் இணைந்து இந்த மாநாடு நடத்தப்படுகின்றது.

யாழ்ப்பாணப் 11

## ஊசி மூலம் ஹெரோயினை செலுத்திய இளைஞர் பலி!

யாழ்ப்பாணம், ஜன. 25

மது போதையில் இருந்த இளைஞர் மேலும் போதைக்காக ஹெரோயினை ஊசி மூலம் செலுத்தியதில் அவர் உயிரிழந்தார் என்று தெரிய வந்துள்ளது.

கொக்குவில் - கலட்டி பகுதியில் உயிரிழந்த நிலையில் காணப்பட்ட இளைஞரின் சடலம் நேற்றுமுன்தினம் யாழ். போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டது.

சடலத்தின் தலையில் சிறு காயங்கள் காணப்பட்டமையால் அவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. 11

## படகு கடத்தலுக்காக மீனவர்கள் கொலை ஏழு குற்றவாளிகளுக்கு மரண தண்டனை!

கொழும்பு, ஜன. 25

அவுஸ்திரேலியாவுக்கு ஆட்களை கடத்துவதற்காக படகு ஒன்றைக் கடத்த முயன்றபோது மீன வர்கள் மூவரை கொலை செய்தமை, இருவரை படுகாயப்படுத்திய சம்பவங்களுடன் தொடர்புடைய ஏழு பேருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய படபெந்திகே நேற்று புதன்கிழமை இந்த தீர்ப்பை அளித்தார்.

கடந்த 2012 ஒக்ரோபர் 15ஆம் திகதி அல்லது அதனை அண்மித்த நாளில் தங்காலை கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த தேஜான் என்ற பலநாள் மீன்பிடி படகு கடத்தப்பட்டது. இதன்போது, அந்தப் படகிலிருந்த மீனவர்கள் மூவர் கொல்லப்பட்டனர். இருவர் படுகாயப்படுத்தப்பட்ட நிலையில் கடலில் வீசப்பட்டனர். இந்த 11

## அல்பிரட் துரையப்பா கொலை: பிரபாகரனுடன் இயங்கிய கிருபநாதன் காலமானார்!

யாழ்ப்பாணம், ஜன. 25

அல்பிரட் துரையப்பா கொலை சம்பவத்தில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் சேர்ந்து இயங்கினார் என்று அறியப்படும் கிருபா என்று அழைக் கப்பட்ட ஆறுமுகம் கிருபநாதன் கடந்த 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலமானார். 11

## நல்லிணக்க பணிமனை சட்டமூலத்துக்கு ஒப்புதல்!

### நேற்று முதல் நடைமுறைக்கு வந்தது

கொழும்பு, ஜன. 25

தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்க பணிமனை சட்ட மூலத்துக்கு சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன அனுமதி வழங்கியுள்ளார்.

நேற்றைய தினம் இதற்கான அறிவிப்பை பாராளு மன்றில் சபாநாயகர் வெளியிட்டார்.

இதன் மூலம், தேசிய ஒருமைப்பாடு 11

## உயிருக்கு ஆபத்தான நிலையில் சாந்தன்!

### சிகிச்சையளிக்கக் கோரி தமிழக முதல்வருக்கு கடிதம்

திருச்சி, ஜன. 25

திருச்சி அகதிகள் சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சாந்தனின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. அவருக்கு உடனடியாக சிகிச்சை அளிக்கப்படவேண்டும் என்று 11



உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# இப்படியும் நடக்கிறது

தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் இலங்கைக்கான இந்தியாவின் புதிய தூதுவருக்கும் இடையே நடைபெற்ற சந்திப்பு குறித்து நேற்று இந்தப் பத்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

இலங்கைத் தமிழர்களின் இனப் பிரச்னைக்கான தீர்வு குறித்து இந்தியாவால் அழுத்தம் கொடுக்க முடியுமே தவிர, அதற்கு மேலே எதுவும் செய்ய முடியாது என்று இங்கே எழுதியிருந்ததைப் படித்து விட்டு ஒரு நண்பர் கனடாவிலிருந்து பேசினார். பேசினார் என்று நான் சொல்வது, என்னோடு பேசியதை அல்ல, என்னை ஏசியதை.

இலங்கையும் இந்தியாவும் ஒப்பந்தம் செய்து விட்டு தமிழர்களின் இனப்பிரச்னைக்கு தீர்வாக மாகாண சபைகளை முன்வைத்து பதின்மூன்றாவது திருத்தத்தை கொண்டுவந்தபோது விடுதலைப் புலிகள் இயக்கம் அதனை முற்றாக நிராகரித்தது. எங்கள் பிரச்னைகளை இந்த மாகாண சபைகளால் தீர்க்க முடியாது என்றே அவர்கள் வாதிட்டனர். அவர்களின் வாதம் சரி என்பதையே இப்போது நடக்கும் சம்பவங்கள் உறுதிப்படுத்துகின்றன.

வடக்கு - கிழக்கு மாகாணங்களை இணைத்து ஒரே மாகாணமாக இருக்கவேண்டும் என்றும் அது தொடரவேண்டுமானால், கிழக்கில் அதற்கான வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும் என்றும் இலங்கை - இந்திய ஒப்பந்தம் சொல்லியது. அன்றைய நிலையில் அப்படியொரு வாக்கெடுப்பு நடைபெற்றிருந்தால் முடிவு எப்படி இருந்திருக்கும் என்பது தெரியவில்லை. ஆனால், இப்போது அப்படியொரு வாக்கெடுப்பு நடைபெற்றால், கிழக்கிலுள்ள தமிழ் மக்களே அதற்கு ஆதரவாக வாக்களிப்பார்களா என்பது தெரியவில்லை. கிழக்கு தமிழர்களை அதற்கான தயார்ப்படுத்தலில் தமிழ்த் தேசியக் கட்சிகள் எப்போதுமே ஈடுபட்டதும் இல்லை.

அதுவல்ல முக்கியமானது, எவர்களின் பிரச்னைக்கு தீர்வாக மாகாண சபைகள் கொண்டுவரப்பட்டனவோ அவர்களின் மாகாண சபைகள் நீண்டகாலமாக இயங்காமலே இருந்தன. வடக்கு மாகாணம் வெறும் ஐந்து வருடங்கள் மாத்திரமே மக்கள் பிரதிநிதிகளால் இயங்கியது. அது எப்படி இயங்கியது என்பது வேறு விடயம்.

ஆனால், வடக்கு மாகாண சபைக்கு தேர்தல்களே நடத்தப்படவில்லை. இதற்கான களநிலைமை சரியாக இல்லை என்று வியாக்கியானம் சொன்னாலும் யுத்தம் முடிந்த இந்தப் பதினான்கு ஆண்டுகளில் ஐந்து ஆண்டுகள் மட்டுமே வடக்கு மாகாண சபை இயங்கியது.


ஓர் இனத்தினுடைய அரசியல் பிரச்னைகளுக்கு தீர்வாக முன்வைக்கப்பட்ட - ஒரு மாகாண சபைக்கு தேர்தலை நடத்துவதற்குக்கூட மத்திய அரசாங்கம் விரும்பினால் மாத்திரமே நடத்தலாம் என்பதே, அந்த மாகாண சபையும் - அதற்கான அரசியல் அமைப்பு திருத்தங்களும் எவ்வளவு பலவீனமானவை என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

அதுவல்ல இன்று பேசப்படவேண்டியது. இந்தியத் தூதுவர், தீர்வு விடயத்தில் எங்களால் அழுத்தம் கொடுக்க மட்டுமே முடியும் என்றும் தீர்வைத் தரமுடியாது என்றும் கூறியிருந்ததை நியாயப்படுத்தி இந்த 'ஊர்க்குருவி' நேற்று எழுதியிருந்ததே கனடா நண்பருக்கு கோபத்தை ஏற்படுத்தியிருக்கவேண்டும். மாகாண சபைகளுக்கு தேர்தல்களை நடத்தக் கோரலாமே தவிர, தேர்தல்களை நடத்த முடியாது என்று நேற்று இந்தப் பத்தியில் எழுதியிருந்தேன்.

அந்த நண்பர் கேட்டார், 'மாகாண சபைகள் மூலம் உங்கள் பிரச்னைக்கு தீர்வு காணலாம் என்று எங்களை நம்பவைத்துத்தானே, "இனி உங்களைப் பாதுகாக்க மாகாண சபைகள் இருக்கின்றன", என்று எங்கள் இயக்கங்களின் ஆயுதங்களை இந்தியா வாங்கியது. அவர்களை நம்பித்தானே எங்கள் ஆயுத இயக்கங்கள் ஆயுதங்களை இந்தியாவிடம் கையளித்தன. இப்போது எங்களால் அழுத்தம் கொடுக்கமுடியுமே தவிர, அதற்கு மேலே எதுவும் செய்யமுடியாது என்பது ஏற்றுக் கொள்ளக்கூடியதா?' என்று கேட்டார் நண்பர்.

அவர் சொல்வதும் நியாயமானதே. அதனைக் கேட்கவேண்டியவர்கள் ஆயுதங்களை இந்தியாவிடம் ஒப்படைத்த இயக்கங்கள். அதாவது இன்று அரசியல் கட்சிகளாக இருக்கின்ற இயக்கக் கட்சிகள்தான்.!

**- ஊர்க்குருவி.**



வரலாற்று பிரசித்தி பெற்ற நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் நேற்று நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள்.

# ஆங்கில எழுத்துக்கூட்டல் போட்டி!

யாழ்ப்பாணம், ஜன. 25

பண்டத்தரிப்பு - காலையடி மறுமலர்ச்சி மன்றத்தினால் நடத்தப்படும் மாணவர்களுக்கான ஆங்கில எழுத்துக்கூட்டல் போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணியளவில் மறுமலர்ச்சி மன்றத்தின் தியாகராஜா மகேந்திரன் குடும்ப ஞாபகார்த்த உள்ளரங்கில் நடைபெறவுள்ளது.

4 பிரிவுகளாக இடம்பெறவுள்ள இந்தப் போட்டியில் தரம் 02உம் அதற்கு உட்பட்டவர்களுக்கான (வயது 5 - 7) பிரிவு - 01இற்கான முதல் சுற்றுப் போட்டிகள் காலை 9 மணிக்கும் தரம் 03 தொடக்கம் தரம் 05 வரையானோருக்கான (வயது 8 - 10) பிரிவு - 02 க்கான முதல் சுற்றுப் போட்டிகள் காலை 9.30 மணிக்கும், தரம் 06 தொடக்கம் தரம் 08 வரையானோருக்கான (வயது 11 - 13) பிரிவு - 03இற்கான முதற்சுற்றுப் போட்டிகள் முற்பகல் 10 மணிக்கும், தரம் 09 தொடக்கம் தரம் 11 வரையானோருக்கான (வயது 14 - 16) பிரிவு - 04இற்கான முதல் சுற்றுப் போட்டிகள் முற்பகல் 10.30 மணிக்கும் நடைபெறவுள்ளன.

(ஐ)



## வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் சிறப்பாக நடந்த சங்காபிஷேகம்!

யாழ்ப்பாணம், ஜன. 25

புங்குடுதீவு மேற்கு அரியநாயகன்புலம் வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த திருவிழாவில் 7ஆம் திருவிழா கடந்த திங்கட்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

இந்தத் திருவிழாவில் 1008 சங்காபிஷேகம் நடைபெற்று மங்கள வாத்தியங்கள் முழங்க விநாயகப் பெருமான் உள் வீதி, வெளி வீதி வலம் வந்து அடியவர்களுக்கு அருள் பாலித்தார்.

இதன்போது சைவப்புலவர், பண்டிதர் செ. த. குமரன், வர்ணனை வழங்கியதுடன் 'மஹோற்சவம்' எனும் தலைப்பில் சிறப்பு சொற்பொழிவும் ஆற்றினார். (ஐ)

## வாழைச்சேனையில் யானையால் தாக்கப்பட்டு வர்த்தகர் உயிரிழப்பு

மட்டக்களப்பு, ஜன. 25

வாழைச்சேனை, வெலிகந்தை செவனப்பிட்டிய நகருக்கு அருகில் காட்டு யானை தாக்கியதில் வர்த்தகர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் நேற்று முன்தினம் புதன்கிழமை வியாபாரம் செய்யச் சென்றபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக மன்னம்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

விநாயகபுரம், பகுதியைச் சேர்ந்த 48 வயதுடைய ஆறு பிள்ளைகளின் தந்தையான முருகேசு முனியாண்டி என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் மன்னம்பிட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

செவனப்பிட்டி சந்தைக்கு தனது குடும்பத்துடன் பொருட்களை விற்பனை செய்வதற்காக அவர் சென்று கொண்டிருந்தபோதே காட்டு யானைத் தாக்குதலுக்கு இலக்காகி மனம்பிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது உயிரிழந்துள்ளதாக விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(அ)

Eelanadu
25.01.2024 வியாழக்கிழமை
சோபகிருது வருடம், தை 11

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# யுத்தங்களின் காலத்தில் தமிழர் அரசியல்?

சர்வதேச அரசியலில் பல்வேறு விவாதங்கள் இடம்பெறுகின்றன. தற்போது இடம்பெற்றுவரும் ரஷ்ய - உக்ரைன் யுத்தம், அதனைத் தொடர்ந்து மத்திய கிழக்கில் திறந்திருக்கும் இஸ்ரேல் - ஹமாஸ் யுத்தம், அதனைத் தொடர்ந்து, செங்கடலில் இஸ்லாமிய ஹவுதி ஆயுதக் குழு தொடர்ந்தும் மேற்குலக வர்த்தக கப்பல்களை தாக்கிவரும் நிலையில், அதற்கு எதிரான அமெரிக்க - இங்கிலாந்து கூட்டும் படை நடவடிக்கைகள் - அதேவேளை, தாய்வானில் பிறிதொரு யுத்த முனையும் திறக்கலாம் என்னும் கணிப்பும் இருக்கின்றது.

இவ்வாறானதொரு சூழலில்தான் தமிழர்களின் அரசியல் எதிர்காலம் ஊசலாடிக் கொண்டிருக்கின்றது. ஏற்கனவே தமிழர் அரசியல் மீதான சர்வதேச கவனம் பெரியளவில் குறைந்துவிட்டது. ஒரு வேளை, விடுதலைப் புலிகளின் யுத்தம் இப்போதும் தொடர்ந்து கொண்டிருந்தால், தமிழர் அரசியல் கவனிப்பை பெற்றிருக்கும். ஆனால், தற்போதைய நிலையில், தமிழர் விவகாரம் என்பது, அடிப்படையில் இலங்கையின் உள் விவகாரமாகவே நோக்கப்படுகின்றது. இந்த பிரச்னைக்கு இலங்கையின் ஆட்சியாளர்கள் நியாயமான ஒரு தீர்வை கண்டால் நல்லது என்றவாறான அணுகுமுறையே, இலங்கை விவகாரம் தொடர்பில் கரிசனை காண்பிப்பதாக நாங்கள் நம்பிக் கொண்டிருப்போரின் நிலைப்பாடு. இந்தியாவின் நிலைப்பாடும் அதுதான். இந்தியாவை பொறுத்தவரையில் அதன் நிலைப்பாடு மிகவும் தெளிவானது. அது பற்றி விவாதிக்க எதுவுமில்லை.

சீன - அமெரிக்க போட்டியுலகும் அதன் விளைவுகளும்தான் சர்வதேச அரசியலில் அடிப்படையாகும். இதுதான் பிரதானமானது மற்றவைகள் அனைத்தும் குறிப்பிட்ட பிராந்தியத்திற்குள் மட்டுப்படுத்தப்பட்ட விடயங்கள். இந்த பின்புலத்தில் நோக்கினால் நமது சூழலில் சிலர் கூறுவது போன்று, தமிழரை எவரும் உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கவில்லை. சுருங்கச் சொன்னால் தமிழர் விவகாரம் என்பது ஒரு விடயமேயல்ல. இலங்கை ஒரு உள்நாட்டு யுத்தத்திற்குள் சிக்கியிருந்த காலத்தில் இலங்கையின் விவகாரத்தை மேற்குலகம் ஒரு பயங்கரவாத பிரச்னையாகவே நோக்கியது. இந்த அடிப்படையில்தான் மேற்குலகில் 32 நாடுகள் விடுதலைப் புலிகள் அமைப்பை ஒரு சர்வதேச பயங்கரவாத அமைப்பாக தடைசெய்தது. யுத்தம் முடிவுற்று, பதினான்கு வருடங்கள் கடந்துவிட்ட பின்னரும் கூட இன்று வரையில் விடுதலைப் புலிகள் அமைப்பின் மீதான தடை நீக்கப்படவில்லை. இதற்கு புலிக்கொடி அரசியல் செய்வதும் ஒரு காரணமாக இருக்கலாம். மேற்குலகில் புலிகளை தடைசெய்த முதல் நாடு அமெரிக்காவாகும்.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால் விடுதலைப் புலிகளை முதன்மைப் படுத்திக் கொண்டு தமிழர்களால் அரசியலை முன்னெடுக்க முடியாது. அது வேண்டுமனால் உள்ளூரில் சீன வெடி போட்டு மகிழ்வோரை சந்தோசப் படுத்தலாம். இந்த விடயத்தை தமிழரசு கட்சியின் புதிய தலைவர் மிகவும் கவனத்துடன் பரிசீலிக்க வேண்டும். கடந்த பதினான்கு வருடகால அனுபவத்தின் அடிப்படையில்தான் இந்த விடயங்கள் இங்கு சுட்டிக்காட்டப்படுகின்றன.

இவ்வாறானதொரு பின்புலத்தில் சர்வதேசத்தை நோக்கிச் செல்கின்றோம் என்று கூறிக்கொண்டு, அரசியலில் எதனை முன்னெடுக்க முடியும் என்னும் கேள்வி முன்னரைவிடவும் வீரியத்துடன் எழுகின்றது. இவ்வாறானதொரு பின்புலத்தில் தமிழ் மக்களின் எதிர்காலம் இருண்டதாகவே தெரிகின்றது. இந்த நிலைமையை புரிந்து கொண்டுதான் நமது அரசியல் தரப்புக்கள் தங்களுக்கான வேலைத்திட்டத்தை வகுக்க வேண்டும்.

இதன் ஆரம்பமாக, அனைவரும் ஓர் அணியாக வருவதுதான் முதல் படி. அது 2009இற்கு முன்னரான கூட்டமைப்பா அல்லது வெளியில் இருக்கும் பலரையும் இணைத்துக் கொண்டு செல்வதற்கான ஓர் ஐக்கிய முன்னணி உபாயமா? இது தொடர்பில் கட்சிகள் தங்களுக்குள் உரையாடி முடிவெடுக்க முடியும். ஆனால், முதலில் நாம் - நமக்குள் ஒன்றாதல் வேண்டும் என்னும் சிந்தனை அனைவருக்குள்ளும் வர வேண்டும். நாங்கள்தான் பெரிய கட்சி - நாங்கள் கூறுவதைத்தான் அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்னும் திமிரை கைவிட வேண்டும். அனைவரும் ஒரு விடயத்தை புரிந்துகொள்ள வேண்டும், நீங்கள் அனைவரும் தோல்விடைந்த கட்சிகள், இயக்கங்களைத்தான் இப்போதும் பிரதிநிதித்துவப்படுத்திக் கொண்டிருக்கின்றீர்கள்.

# ராஜபக்ஷவினரை பாதுகாக்கவே நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம்

## நளின் பண்டார குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 25

நிகழ்நிலை காப்புச் சட்டம் ராஜபக்சவினரை பாதுகாக்க கொண்டு வரப்பட்ட ஒன்றென ஐக்கிய மக்கள் சக்தியின் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இது நீதியான சட்டமூலம்,திருத்தத் துறைசார் குழுக்களில் நிறைவேற்றப்படவில்லை. அவசரமாக சட்டமூலத்தை கொண்டு வருகின்றனர். அரசாங்கம் பெரிய பீதியில் இருக்கின்றது. எந்த சந்தர்ப்பத்திலும் சமூகத்திற்கு எழுச்சி ஏற்படலாம் என்பதை அவர்கள் அறிவார்கள்.

நூற்றுக்கு 18 வீதம் பெறுமதி சேர் வரி அறவிடப்படுகிறது. மக்களுக்கு வாழ முடியா நிலைமை ஏற்பட்டுள்ளது.

எந்த சட்டமூலம் கொண்டு வரப்பட்டாலும் இன்னும் சில மாதங்களில் ஜனாதிபதி தேர்தலை நடத்தியாக வேண்டும்.

இவர்களுக்கு பாதுகாப்புச் சட்டங்களால் தப்பித்து இருக்க முடியாது. பாதுகாப்பு வீடுகளுக்கு செல்ல நேரிடும். மக்கள் தமது வாக்குகள் மூலம் இவற்றுக்கு பதிலளிக்க காத்திருக்கின்றனர்.

அப்போது இப்படியான சட்டங்கள் மூலம் தப்பித்து இருக்க முடியாது. பதில் கிடைக்கும் போது செல்ல இடமிருக்காது. ஐக்கிய மக்கள் சக்தி இந்த சட்டமூலத்தை எதிர்க்கின்றது.

2024 ஆம் ஆண்டு அமைக்கப்படும் ஐக்கிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தின் கீழ் ஊடகங்களுக்கு சுதந்திரத்தை வழங்குவோம் - என்றார். (அ)

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தின் சில சரத்துக்கள் அரசமைப்புக்கு முரண்!

## மல்கம் ரஞ்சித் ஆண்டகை உயர் நீதிமன்றில் மனு

கொழும்பு, ஜன. 25

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தின் சில சரத்துக்கள் அரசியலமைப்புக்கு முரணானது என தீர்ப்பளிக்குமாறு கோரி கொழும்பு பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை உயர் நீதிமன்றில் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனுவில் சட்டமா அதிபர் பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டுள்ளார்.

குறித்த சட்டமூலத்தில் உள்ள விதிகள், நியாயமான காரணமின்றி எந்தவொரு நபரையும் கைது செய்து தடுத்து வைக்க இராணுவம், பொலிஸார் மற்றும் கடலோர காவல்படைக்கு அதிகாரம் அளித்துள்ளதாக மனுதாரர் கர்தினால் தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பில் உறுதிப்படுத்தியுள்ள தனி மனித சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் உள்ளிட்ட அடிப்படை உரிமைகள் மீறப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# பாராளுமன்றில் டிரான் தெரிவித்த கருத்தை நிராகரித்தது ஆசிய இணைய கூட்டமைப்பு

கொழும்பு, ஜன. 25

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் பாராளுமன்றத்தில் நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம் குறித்த விவாதத்தில் வெளியிட்ட கருத்துக்களை நிராகரித்துள்ள ஆசிய இணைய கூட்டமைப்பு, நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலம் அதன் தற்போதைய வடிவத்தில் முன்னெடுக்க முடியாதது மேலும் இலங்கையின் டிஜிட்டல் பொருளாதாரத்தின் சாத்தியான வளர்ச்சி மற்றும் வெளிநாட்டு முதலீட்டை பாதிக்கும் எனவும் குறிப்பிட்டுள்ளது.

உலகின் மிகவும் வலுவான இணைய தொழில்நுட்ப நிறுவனங்களை உள்ளடக்கிய அமைப்பே ஆசிய இணைய கூட்டமைப்பு என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த அமைப்பு ஆசிய பிராந்தியத்தில் இணையம் தொடர்பான விடயங்களுக்கு தீர்வை காணவும் ஊக்குவிக்கவும் முயல்கின்றது.

ஆசிய இணைய கூட்டமைப்பு அப்பிள், பின்ரெஸ்ட், கூகுள், டுவிட்டர் உட்பட பல நிறுவனங்களை பிரதிநிதித்துவம் செய்கின்றது.

நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலம் குறித்து பொதுமக்கள் பாதுகாப்புஅமைச்சர் நாடாளுமன்றத்தில் தெரிவித்த கருத்துக்களை நிராகரிக்கவும் பதிலளிக்கவும் விரும்புகின்றோம் என ஆசிய இணைய கூட்டமைப்பின் முகாமைத்துவ பணிப்பாளர் ஜெவ் பெய்ன் தெரிவித்துள்ளார்.

இந்த சட்டமூலத்தினை முன்னெடுக்கும் செயற்பாடுகளின் போது நாங்கள் வழங்கிய குறிப்பிடத்தக்க பங்களிப்பை அமைச்சரின் உரை அங்கீகரிக்கவில்லை - எங்கள் அமைப்பு பரிந்துரைகளை முன்வைத்திருந்ததுடன் சிங்கப்பூரில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் பிரதிநிதிகளை சந்தித்திருந்தது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்து கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். உறவினர்கள் வீடு தேடி வருவார்கள். பூர்வீக சொத்து பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும்.

**இடபம்**
குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். சில வேலைகளை விட்டுக்கொடுத்து முடிப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிப்பு கூடும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள்.

**மிதுனம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் சந்தேகப்படுவதை முதலில் நிறுத்துங்கள். நீங்கள் சொல்லக்கூடிய சில கருத்துக்கள் சீரியசாக வாய்ப்பிருக்கிறது. வியாபாரத்தில் இழப்புகள் ஏற்படும்.

**கடகம்**
அனாவசிய செலவுகளை குறைக்கப்பாருங்கள். திடீர் பயணங்கள் இருக்கும். குடும்பத்தில் சின்ன சின்ன வாக்குவாதங்கள் வந்து நீங்கும். சகோதர வகையில் அலைச்சல் உண்டு.

**சிம்மம்**
எதார்த்தமாக பேசி கவர்வீர்கள். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். பழைய கடனில் ஒரு பகுதியை பைசல் செய்வீர்கள். பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள்.

**கன்னி**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். உறவினர், நண்பர்கள் எதிர்பார்ப்புடன் பேசுவார்கள். சிலர் உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். வீடு, வாகனத்தை சீர்செய்வீர்கள்.

**துலாம்**
கணவன் - மனைவிக்குள் மனம் விட்டு பேசுங்கள். புது முடிவுகள் எடுப்பீர்கள். புதியவர்கள் நண்பர்களாவார்கள். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். உடல் நிலை சீராகும்.

**விருட்சிகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் ஒரு விஷயத்தை நினைத்து அதிகளவில் குழப்பம் அடைவீர்கள். உறவினர்கள், நண்பர்கள் விஷயத்தில் அத்துமீறி தலையிட வேண்டாம். நியாயத்தை பேசப் போய்

**தனுசு**
சகோதரர்கள் வகையில் நன்மை உண்டு. விலை உயர்ந்த ஆபரணம் வாங்குவீர்கள். மனைவி வழியில் மதிக்கப்படுவீர்கள். வேற்றுமதத்தவர் உதவுவார். எதிர்பாராத சந்திப்பு நிகழும்.

**மகரம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். நெருங்கியவர்களுக்காக மற்றவர்களின் உதவியை நாடுவீர்கள்.

**கும்பம்**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். பிள்ளைகளின் தனித்திறமைகளை கண்டறிவீர்கள். சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். நட்பு வட்டம் விரியும்.

**மீனம்**
கடந்த கால இனிய அனுபவங்களை நினைவு கூர்ந்து மகிழ்வீர்கள். தாய்வழி உறவினர்களால் அலைச்சல் ஏற்படும். பணப்பற்றாக்குறையை சமாளிப்பீர்கள். புதுவேலை அமையும்.

# தமிழர் ஒற்றுமையை சிதைக்கவே சாதி, மத வேறுபாடுகள் உருவாக்கம்!

## முதல்வர் ஸ்டாலின் தெரிவிப்பு

மதுரை, ஜன. 25

“சாதிப் பிளவுகளும் மத வேறுபாடுகளும் தமிழர் ஒற்றுமையை சிதைக்க பிற்காலத்தில் உருவாக்கப்பட்டவை என்பதை உணர்ந்து, தமிழர் என்ற நமது அடையாளத்தோடு இது போன்ற பண்பாட்டுத் திருவிழாக்களை ஒற்றுமையாக நடத்துவோம்!”

- இவ்வாறு மதுரையில் ஜல்லிக்கட்டு அரங்கம் திறப்பு விழாவில் தமிழ்நாடு முதல்வர் மு. க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

மேலும், பல்லாயிரம் ஆண்டு பெருமை கொண்ட நம்முடைய தமிழினம் கொண்டாடும் ஏறுதழுவுதலுக்கான அரங்கத்தை கட்டி எழுப்பியவன் இந்த ஸ்டாலின் என்று வரலாற்றில் என்னுடைய பெயர் இடம்பெறுவது எனக்கு கிடைத்திருக்கக்கூடிய பெருமை. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைந்து, மூன்று ஆண்டுகள்தான் ஆகியிருக்கிறன. அதற்குள்ளாக, மூன்று முக்கியமான கம்பீரச் சின்னங்களை இந்த மதுரையில் ஏற்படுத்தியிருக்கோம். ஒன்று, தமிழினத்தினுடைய பழமையை சொல்கின்ற கீழடி அருங்காட்சியகம் மதுரைக்கு அருகில் அமைக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவது, கலைஞரின் பெயரால் மாபெரும் நூலகம் பிரமாண்டமாக மதுரை மாநகரில் அறிவு மாளிகையாக அமைக்கப்பட்டிருக்கிறது. இப்போது மூன்றவதாக, இந்த கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கம் ஜல்லிக்கட்டுக்கு பெயர்போன அலங்காநல்லூரில் அமைக்கப்பட்டிருக்கிறது.

அன்னை தமிழ் நிலத்துக்கு பேரறிஞர் அண்ணா ‘தமிழ்நாடு’ என பெயர் சூட்டினார். தமிழுக்கு ‘செம்மொழி’ தகுதி பெற்று தந்தார் தலைவர் கலைஞர். இன்றைக்கு தமிழர் பண்பாட்டு அடையாளமான ஏறுதழுவுதலுக்கு, நம்முடைய திராவிட மாடல் ஆட்சி அரங்கம் அமைத்திருக்கிறோம் - என்றார். (ஐ)

# தமிழ்நாடு அரசாங்கத்தை கண்டித்து போராட்டம்!

## அ. தி. மு. க. கட்சி அறிவிப்பு

சென்னை, ஜன. 25

‘பட்டியலின மாணவி மீது வன்கொடுமைகளை ஏவி கொடூரத் தாக்குதல் நடத்தியவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்காத தி. மு. க. அரசைக் கண்டித்து, அ. தி. மு. க. சார்பில் அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் எதிர்வரும் பெப்ரவரி முதலாம் திகதி கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெறும்’ என்று அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“கடந்த வாரம், கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை அருகே வசிக்கும் பட்டியல் சமூகத்தைச் சேர்ந்த மாணவி ஒருவர், பல்லாவரம் தொகுதி தி. மு க. சட்டமன்ற உறுப்பினர் கருணாநிதியின் மகன், மருமகள் மீது கொடுத்துள்ள முறைப்பாடு நாட்டையே உலுக்கி இருக்கிறது. கருணாநிதியின் மகனும், மருமகளும் வீட்டு வேலைகளை செய்வதற்கென்று, கொத்தடிமை போல தன்னை அழைத்துச் சென்று சித்ரவதை செய்த கொடூரத்தை அந்த மாணவி விவரித்த காட்சிகள் பல்வேறு சமூக ஊடகங்களில் வெளியாகி, மனிதாபிமானமுள்ள அனைத்து மக்களின் மனசாட்சியையும் உலுக்கி இருக்கிறது.

அவர்கள் மீது இதுவரை தி. மு. க. அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. கருணாநிதி மீதும் அவரின் மகன் மற்றும் மருமகள் மீதும் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி எதிர்வரும் பெப்ரவரி முதலாம் திகதி கண்டனப் போராட்டம் நடைபெறும் - என்றுள்ளது.

(ஐ)

# ஏறுதழுவுதல் அரங்கத்தை திறந்து வைத்தார் முதல்வர்

மதுரை, ஜன. 25

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே கீழக்கரையில் 62.78 கோடி (இந்திய) ரூபாய் செலவில் ஏறுதழு வுதல் மைதா னத்தை தமிழ்நாடு முதல் வர் மு. க. ஸ்டாலின் திறந்துவைத்தார்.

இதனைத் தொடர்ந்து காலை 11.10 மணியளவில் ஏறுதழுவுதல் போட்டி நடைபெற்றது. முதலில் கோயில் காளைகள் அவிழ்த்து விடப்பட்டன. பின்னர் ஒன்லைன் ரோக்கன் எண் வரிசையின் அடிப்படையில் வாடி வாசலில் காளை கள் அவிழ்த்து விடப்படுகின்றன. முதல்வர் ஸ்டாலின் சில நிமிடங் கள் போட்டியைக் கண்டு ரசித்து விட்டு அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார்.



# இராமர் கோயில் திறப்பால் அரசியல் மாற்றம் ஏற்படாது

## காங்கிரஸ் கட்சி

கும்பகோணம், ஜன. 25

கோயில் திறப்பை அரசியல் ஆக்குகிறார்கள். அயோத்தியில் இராமருக்கு கோயில் கட்டியதால், எந்த அரசியல் மாற்றமும் ஏற்படப் போவதில்லை - என்று தெரிவித்துள்ளார் காங்கிரஸ் கட்சியின் தமிழக தலைவர் கே. எஸ். அழகிரி.

கும்பகோணத்தில் நிகழ்வு ஒன்றின் பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட அவர்,

அயோத்தியில் இராமர் கோயில் திறக்கப்படுவதற்கு எதிராக யாரும் செயல்படவில்லை. மகிழ்ச்சியாகவும், அமைதியாகவும் கொண்டாட வேண்டியதை, பிரதமர் மோடி பதற்றத்துடன் கொண்டாட வேண்டிய காரணம் என்ன?

கோயில் திறப்பை அரசியல் ஆக்குகிறார்கள். அயோத்தியில் இராமருக்கு கோயில் கட்டியதால், எந்த அரசியல் மாற்றமும் ஏற்படப் போவதில்லை. அசாமில் ராகுல் காந்தியின் வாகனம் தாக்கப்பட்டது கண்டிக்கத்தக்கது.

(ஐ)

# 60 வகை மருந்துகளுக்கு தொடர்ந்தும் தட்டுப்பாடு

## சுகாதார அமைச்சு தகவல்

கொழும்பு, ஜன. 25

**இலங்கையின் மருத்துவக் கட்டமைப்பில் 60 வகையான மருந்துகளுக்கு தொடர்ந்தும் தட்டுப்பாடு நிலவுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.**

பற்றாக்குறையாகவுள்ள சகல வகையான மருந்துகளும் தற்போது முன்பதிவு செய்யப்பட்டுள்ளதாக மருந்து விநியோகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

அந்த மருந்துகள் சில வாரங்களுக்குள் கட்டம் கட்டமாக நாட்டிற்கு கொண்டுவரப்படும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

உள்நாட்டு உற்பத்தியாளர்களிடமிருந்து தற்போது அதிகளவு மருந்துகள் கொள்வனவு செய்யப்படுவதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (அ)

# 'ரின்' இலக்கம் வழங்க இனி புதிய நடைமுறை

கொழும்பு, ஜன. 25

வரி செலுத்துநர் அடையாள இலக்கத்தை , பொதுமக்களின் தரவுகளைப் பேணும் அரச நிறுவனங்களினூடாக வழங்குவது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

அந்த நிறுவனங்களின் ஊடாக உரிய தரவுகளைப் பெற்று அவர்களைப் பதிவு செய்த பின்னர், பதிவு இலக்கத்தை வழங்க எதிர்பார்த்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

சட்ட ரீதியான சிக்கல்கள் இல்லாத நிறுவனங்களில் இருந்து இந்த தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

ஒன்லைன் ஊடாக வரி செலுத்துநர் அடையாள இலக்கத்தை பெற்றுக்கொள்வதற்காக மிகவும் இலகுவான நடைமுறையொன்றை தயாரிப்பதே இதன் நோக்கமாகும் என அவர் கூறினார். (அ)

# நாட்டில் 9 நாட்களில் 8 பேர் சுட்டுக்கொலை!

கொழும்பு, ஜன. 25

இலங்கையில் ஜனவரி 15 ஆம் திகதி முதல் 23 ஆம் திகதி வரையான 9 நாட்களுக்குள் 8 பேர் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு, மட்டக்குளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரந்திய உயன தொடர்மாடி குடியிருப்புக்கு அருகில் ஜனவரி 15 ஆம் திகதி இரவு துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது.

ஒட்டோவில் இருந்த இருவரே துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டு தப்பிச்சென்றனர்.

'படா ரஞ்சி' என அழைக்கப்படும் செந்தில் ஆறுமுகன் என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார். இது பாதாள குழுக்களுக்கிடையிலான மோதலாக கருதப்படுகின்றது.

சுட்டுக்கொல்லப்பட்டவர் இந்தியாவில் தலைமறைவாகியுள்ளார் எனக் கூறப்படும் பாதாள குழு உறுப்பினர் பூகுடு கண்ணாவின் உதவியாளராக இவர் செயற்பட்டுள்ளார் எனக் கூறப்படுகின்றது.

ஜனவரி 20 ஆம் திகதி 24 வயது இளைஞர் ஒருவர், அடையாளம் தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார்.

அதேவேளை ஜனவரி 22 ஆம் திகதி அபே ஜனபலவேகய கட்சியின் தலைவர் உட்பட ஐவர் பெலியத்தயில் சுட்டுக்கொல்லப்பட்டனர். இதுவும் பாதாளகுழு மோதலாக கருதப்படுகின்றது.

கம்பஹா, கஹடான கணாராம விகாரையில் நேற்று நண்பகல் 45 வயதுடைய பௌத்த தேரர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார். காணி பிரச்சினையொன்றை அடிப்படையாகக்கொண்டு இந்த துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

மேற்படி துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் இனந்தெரியாத நபர்களால் நடத்தப்பட்டவை, சந்தேக நபர்கள் எவரும் இன்னும் கைதுசெய்யப்படவில்லை. விசாரணைகள் தொடர்கின்றன. (அ)



# 300 கிலோ கஞ்சா எரிப்பு

வவுனியா, ஜன. 25

வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியனின் மேற்பார்வையின் கீழ் நேற்றுக் காலை 300 கிலோவுக்கு மேற்பட்ட கஞ்சா எரிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் வவுனியா மேல் நீதிமன்றத்தில் நிறைவு செய்யப்பட்ட 12 வழக்குகளில் முன்னிலைப்படுத்தப்பட்ட 300 கிலோவுக்கு மேற்பட்ட கஞ்சா வவுனியா ஏ-9 வீதி, சாந்த சோலை பகுதியில் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் மேற்பார்வையின் கீழ் நீதிமன்ற உத்தியோகத்தர்கள் , நீதிமன்ற பொலிஸாரின் ஒத்துழைப்புடன் எரிக்கப்பட்டது

சுகாதார நிலைமைகளை கருத்தில் கொண்டு மக்கள் நடமாட்டம் மற்றும் அருகே வீடுகள் அற்ற பகுதியில் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி கஞ்சா எரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# தேரரைக் கொலை செய்தவர்கள் பயணித்த கார் காட்டில் தீக்கிரையான நிலையில் மீட்பு!

கொழும்பு, ஜன. 25

பௌத்த தேரரை சுட்டுக்கொலை செய்வதற்காக வந்தவர்கள் பயணித்ததாக சந்தேகிக்கப் படும் சொகுசு கார், கடுவெல, கொடல்ல பகுதி யில் உள்ள காட்டுப்பகுதியில் வைத்து எரித்து நாசமாக்கப்பட்டுள்ளது.

அடையாளம் காணமுடியாத வகையில் குறித்த கார் தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளது. கொலை யாளிகள் பயணித்த வாகனமா இது என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன.

சந்தேக நபர்கள் பயணித்த காரில் பொருத்தப்பட்டிருந்த இலக்கத் தகடுக்கு உரித்தான வாகன மொன்று பாணந்துறை பகுதியில் உள்ள வாகனம் திருத்தும் நிலையத்தில் இருந்துள்ளது.

எனவே , களவாடப்பட்ட காரை, இலக்கத் தகட்டை மாற்றிக்கொண்டு கொலையாளிகள் பயணித்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

கம்பஹா, மல்வத்துஹிரிபிட்டிய பகுதியிலுள்ள விகாரைக்குள் நேற்று முன் தினம் முற்பகல் நுழைந்த நபர்கள் சிலர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் தேரர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் என தெரிவித்தே, குறித்த குழுவினர் விகாரைக்குள் நுழைந்ததாக நேரில் கண்டவர்கள்



தெரிவித்துள்ளனர்.

கம்பஹா, கஹடான கனாராம விகாரையில் தற்காலிகமாக பணியாற்றிய 45 வயதான கலபலுவாவே தம்மரத்தன தேரர் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகியுள்ளார். துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்த தம்மரத்ன தேரர் கம்பஹா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

கார் ஒன்றில் வந்த நால்வர் ரி - 56 ரக துப்பாக்கியை பயன்படுத்தி இந்த குற்றத்தை மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# வனவளத் திணைக்களத்தின் கீழ் உள்ள காணிகள் விவசாயத்துக்கு!

கொழும்பு, ஜன. 25

வனவளப் பாதுகாப்புத் திணைக்களத்தின் கீழ் உள்ள காணிகளை விவசாயம் மற்றும் சுற்றுலாத் துறைக்காக விடுவிப்பதற்கான பேச்சுவார்த்தை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் தெரிவித்தார்.

மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களில் விவசாயத் துறையின் அபிவிருத்திக்காக 61 குளங்களின் புனரமைப்புப் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப பல வருடங்கள் செல்லுமென்று நாங்கள் உண்மையில் நினைத்திருந்தோம். ஆனால் எமது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மிகவும் திறமையான முறையில் கையாண்டு, எமது நாட்டு மக்களுக்கு விடிவு காலம் வரும் வகையில் அதனை செயற்படுத்தி இருக்கின்றார். அதற்காக முதலில் அவருக்கு நன்றி தெரிவிக்கிறேன்.

மேலும், வடக்கு, கிழக்கு மற்றும் மத்திய மாகாணம் உட்பட கிராமிய பொருளாதார அமைச்சுக்கு பாரிய வேலைத்திட்டங்களை முன்னெடுக்கக் கூடிய வகையில் இம்முறை நிதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. கடந்த வருடம் நேரடியாக கிராமிய பொருளாதார அமைச்சின் ஊடாக, மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் பல வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. குறிப்பாக ஆடுகளை வழங்குதல் மற்றும் சிறு தானிய பயிர்ச்செய்கைக்கு அவசியமான விதைகளை வழங்கும் வேலைத் திட்டங்களும் இவற்றில் அடங்கும்.

இவ்வாறு பல்வேறு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தியன் மூலம் எமது அமைச்சுக்கு வழங்கப்பட்ட நிதியில் சுமார் 95 வீதம் முதல் 98 வீதம் வரையில் செலவிடப்பட்டுள்ளது. அதன் ஊடாக மக்கள் பயனடைந்துள்ளனர்.

குறிப்பாக, மன்னார் மாவட்டத்தில் இம்முறை பயறு அறுவடை பாரிய முன்னேற்றம் கண்டுள்ளது. அந்த வகையில் மன்னார் மாவட்டத்தில் மாத்திரம் 1050 மெட்றிக் டொன் பயறு அறுவடை செய்யப்பட்டது. அத்துடன், ஆடு வளர்ப்பிலும் பாரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

விவசாயத் துறையின் அபிவிருத்திக்காக மேலும் பல்வேறு வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றை நேரில் சென்று பார்வையிட்டு அது தொடர்பான விடயங்களை மக்களுடனும் அதிகாரிகளுடனும் கலந்துரையாடியுள்ளோம். குறித்த வேலைத்திட்டங்களை நடைமுறைப் படுத்தும்போது ஏற்படும் பிரச்னைகளைத் தீர்த்து வைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் வெளிநாட்டு உதவிகளுடன் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக விவசாய முன்னேற்றத்திற்காக குளங்களை அபிவிருத்தி செய்யும் பணிகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அந்த வகையில் மன்னார் மாவட்டத்தில் 30 குளங்களும் வவுனியா மாவட்டத்தில் 31 குளங்களும் அபிவிருத்தி செய்யப்படுகின்றன. இவ்வேலைத்திட்டங்கள் நிறைவடைந்ததன் பின்னர் அப்பிரதேச மக்களின் வாழ்வாதாரம் மட்டுமன்றி குறித்த மாவட்டம் உட்பட முழு நாட்டினதும் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்ய இது உதவும் என்பதையும் குறிப்பிட வேண்டும் - என்றார். (அ)

# சுதந்திர கட்சி தலைமையில் புதிய பொதுக் கூட்டமைப்பு!

## மைத்திரி தலைமையில் ஆராய்வு

கொழும்பு, ஜன. 25

**சுதந்திரக் கட்சி தலைமையிலான பொதுக் கூட்டமைப்பு ஒன்றை எதிர்காலத்தில் உருவாக்குவது தொடர்பில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.**

சுதந்திரக் கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தலைமையில், கொழும்பு - டாலி வீதியிலுள்ள சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் இந்த கலந்துரையாடல் நடைபெற்றுள்ளது.

பொதுஜன பெரமுனவில் இருந்து விலகி தற்போது பாராளுமன்றில் சுயாதீனமாக செயற்படும் பாராளுமன்ற உறுப்பினர்களான அனுர பிரியதர்சன யாப்பா, நிமல் லான்சா மற்றும் அமைச்சர்களான சுசில் பிரேம் ஜயந்த, நளின் பெர்னாண்டோ மற்றும் இராஜாங்க அமைச்சர் ஜகத் புஸ்பகுமார ஆகியோரும் இந்த கலந்துரையாடலில் பங்கேற்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், சுதந்திரக் கட்சியின் பதில் பொதுச் செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான சாரதி துஷ்மந்த மித்ரபால, அமைச்சர் மஹிந்த அமரவீர, இராஜாங்க அமைச் சர் லசந்த அழகியவண்ண உள்ளிட்டோரும் இதில் பங்கேற்றிருந்தனர்.

இந்த கூட்டணி தொடர்பில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் சமசமாஜ கட்சி என்பவற்றுடனும் கலந்துரையாடப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது. (அ)

# பெலியத்தை படுகொலைக்கு பயன்படுத்தப்பட்ட ஜீப் மீட்பு!

கொழும்பு, ஜன. 25

பெலியத்த பகுதியில் ஐவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் பயணித்த ஜீப் ரக வாகனம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

காலி ஹெவ்லோக் பகுதியில் உள்ள வாகனத் தரிப்பிடத்தில் வைத்தே குறித்த ஜீப் நேற்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மாத்தறையில் இருந்து வந்த விசேட பொலிஸ் அதிகாரிகளால் குறித்த ஜீப் கைப்பற்றப்பட்டுள்ளது.

போலி இலக்க தகட்டை பயன்படுத்தியே வாகனம் தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது, எனவே, அதன் உண்மையான உரிமையாளரை கண்டுபிடிக்கும் நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளது.

அபே ஜனபலவேகய கட்சியின் தலைவர் உட்பட ஐவர் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# தெற்கு அதிவேக வீதியில் கடுமையான பனிமூட்டம்



கொழும்பு, ஜன. 25

தெற்கு அதிவேக வீதியில் கடும் பனிமூட்டம் நிலவுவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன் காரணமாக வெலிப்பன்ன நுழைவாயிலுக்கும் பின்னதுவ நுழைவாயிலுக்கும் இடையில் பயணிக்கும் சாரதிகளை கவனமாக வாகனத்தை செலுத்துமாறு பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

அத்துடன், அதிவேகமாக வாகனத்தை செலுத்த வேண்டாம் என வாகன சாரதிகளை பொலிஸார் கோரியுள்ளனர். (அ)

# ரயில் திணைக்களத்தை சீரமைப்பதற்கு பரிந்துரைகள் அடங்கிய அறிக்கை தயார்

கொழும்பு, ஜன. 25

ரயில்வே திணைக்களத்தை மறுசீரமைப்பதற்கான பரிந்துரைகள் அடங்கிய அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாக அதற்காக நியமிக்கப்பட்ட குழு தெரிவித்துள்ளது.

ரயில்வே திணைக்களத்தின் செயற்றிறனை அதிகரிப்பதற்காகவும் நட்டத்தைக் குறைப்பதற் காகவும் அந்த அறிக்கையில் யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாக துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் செயலாளர் கே.டி.எஸ்.ருவன் சந்திர தெரிவித்தார்.

இந்த அறிக்கை அடுத்த வாரம் ஜனாதிபதியின் செயலாளரிடம் கையளிக்கப் படவுள்ளது. ரயில்வே திணைக்களத்தினால் மக்களுக்கு சிறப்பான சேவையை வழங்குவது தொடர்பான யோசனைகள் அந்த அறிக்கையில் உள்ளடங்கியுள்ளதாக துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் செயலாளர் தெரிவித்தார். (அ)



# யாழ். சித்த வைத்தியசாலைக்கான புதிய கட்டடம் அச்சுவேலியில் திறப்பு

யாழ்ப்பாணம், ஜன. 25

யாழ்.மாவட்ட ஆயுர்வேத சித்த வைத்தியசாலையில் உள்நோயாளர்களுக்கான புதிய கட்டடம் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் அச்சுவேலியில் இயங்கும் மாவட்ட சித்த வைத்தியசாலையின் சேவையை விஸ்தரிக்கும் நோக்கில் புதிய கட்டடத் தொகுதி வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம் சார்ள்ஸினால் நேற்று முன்தினம் திறந்துவைக்கப்பட்டது.

இந்த புதிய கட்டடத்தில் இனிவரும் காலத்தில் இலவச சேவையினை இயக்கவும், அதேபோல முன்னர் இலவச சேவை இடம்பெற்ற இடத்தில் கட்டண சேவையினை இயக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட மக்களிடையே உள்ளூர் மருந்துகளுக்கு அதிக வரவேற்பு உள்ள நிலையில் நோயாளர்களின் வசதிகளை மேம்படுத்தும் நோக்குடன் முன்னெடுக்கப்பட்ட இந்தப் செயற்திட்டத்துக்கு 105 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

ஆயுர்வேத வைத்தியசாலையின் பல்வேறு சேவைகளுக்குமான புதிய பிரிவுகளும் திறந்து வைக்கப்பட்டன. நோயாளிகளுக்கு சுத்திகரிக்கப்பட்ட நீர் மற்றும் வெந்நீர் பெற்றுக்கொள்ள ஏதுவாக வெந்நீர் - சுத்திகரிப்பு இயந்திரமும் திறந்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் ‘ஆகார ஔடதம்’ எனும் பாரம்பாரிய உணவு தொடர்பான இறுவட்டு, ‘சித்த மருந்து செய்முறை தொகுப்பு’ எனும் நூலின் இறுவட்டும் வெளியிட்டு வைக்கப்பட்டன.

நிகழ்வின் பின்னர் ஆளுநர் நோயாளர்களைச் சந்தித்து அவர்களின் நலன்களை விசாரித்ததுடன் அவர்களுடனும் கலந்துரையாடினார். (அ)

# தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்க அலுவலக சட்டமூலத்திற்கு சபாநாயகர் நேற்று அனுமதி!

கொழும்பு, ஜன. 25

தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலக சட்டமூலத்திற்கு தாம் அங்கீகாரம் வழங்கியுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அறிவித்துள்ளார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எனவே, தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலக சட்டமூலம் நேற்று முதல் சட்டமாக்கப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் அலுவலகத்தினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைய தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க அலுவலகம் அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பெப்ரவரி நடுப் பகுதியில் மின் கட்டணம் அதிகரிப்பு?

கொழும்பு, ஜன. 25

இந்த ஆண்டுக்கான மின்சார கட்டண திருத்தம் எதிர்வரும் பெப்ரவரி மாத நடுப் பகுதியில் மேற்கொள்ளப்படும் என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் மஞ்சுள பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுயில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறினார்.

மின்சாரக் கட்டணத்தை திருத்தியமைப்பதில் ஒரு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும், இதனால் மின்சார வாரியம் முன்வைத்த முன்மொழிவு பொதுமக்களுக்கான கலந்தாய்வு ஆரம்பிக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# வவுனியாவை வந்தடைந்தது மடுமாதா திருச்சொரூப பவனி



வவுனியா, ஜன. 25

மடு தேவாலய மாதாவுக்கு மணிமுடி சூடிய நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மடு மாதாவின் திருச்சொரூபம் மறைமாவட்ட பங்குகளுக்கு எடுத்துச் செல்லப்படும் திருப்பயணம் நேற்று முன் தினம் மாலை வவுனியா இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயத்தினை வந்தடைந்தது.

இந்த ஆண்டு மடு அன்னைக்கு முடி சூட்டப்பட்டு 100 ஆவது ஆண்டு யூபிலியை முன்னிட்டு மடு அன்னையின் திருச்சொரூபம் மடுவிலிருந்து மன்னார், வவுனியா மாவட்டங்களை உள்ளடக்கிய மன்னார் மறை மாவட்டங்களின் பங்குத் தளங்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றது.

அந்த வகையில் மடு மாதாவின் திருச்சொரூபம் நேற்று முன் தினம் மாலை வவுனியா இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயத்தினை வந்தடைந்தது. குறித்த பவனியை வரவேற்கும் முகமாக வரவேற்பு நடனம், வெடிகள், பதாகைகள், வெளிச்சக் கூடுகள் என பல்வேறு விதங்களில் பவனிக்கு வரவேற்பளிக்கப்பட்டது. (அ)







படங்கள் : ஐ.சிவசாந்தன்

# நல்லூர் கந்தனின் 290ஆவது வருட புதிர் தின அறுவடை

யாழ்ப்பாணம், ஜன. 25

நல்லூர் கந்தன் ஆலயத்தில் நெற்புதிர் அறுவடை நிகழ்வு நேற்றுக் காலை இடம்பெற்றது.

தைப்பூச தினத்துக்கு முதல் நாள் கொண்டாடப்படும் 'புதிர் தினம்' எனும் பாரம்பரிய நிகழ்வில் கோவில் அறங் காவலரும், சிவாச்சாரியாரும் முதலாவது புதிரை அறுவடை செய்ய ஆலயத்துக்கு சொந்தமான மறவன்புலவில் உள்ள வயலுக்கு செல்வார்கள்.

அந்த வயலில் பூசை வழிபாட்டுடன் அறுவடை செய்யும் நெல்லில் இருந்து அமுது தயாரித்து கந்தசுவாமியாருக்கு படையல் செய்து பூசைகள் செய்வது வழக்கம்.

அவ்வாறே இம்முறையும் இடம் பெற்ற படையல் பூசைகளை தொடர்ந்து பக்தர்களுக்கும் அமுது வழங்கப்பட்டது.

இவ்வழிபாட்டு முறை அக்கோயிலின் மரபாக பண்பாட்டு விழாவாக பேணப் பட்டு வருகிறது. இப்புதிர் விழா 290 ஆவது ஆண்டாக இவ்வருடம் கொண் டாடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# உத்தேச இணையசட்டத்தால் தேர்தல்களுக்கு அச்சுறுத்தல்!

## சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம்

கொழும்பு, ஜன. 25

**இலங்கையின் உத்தேச இணையசட்டம் எதிர்வரும் தேர்தல்களிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றது என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.**

இலங்கை ஜனாதிபதி இந்த வாரம் பாராளுமன்றத்தில் அவசரமாக கொண்டுவர முயற்சிக்கும் அடக்குமுறையான புதிய இணையச் சட்டம் நீண்ட கால தண்டனையை வழங்க - பேச்சுக்கள், கருத்துக்கள் தொடர்பிலான கூடிய பரந்த மற்றும் தெளிவற்ற குற்றங்களை உருவாக்கும் என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

இலங்கை இந்த வருடத்தின் பிற்பகுதியில் ஜனாதிபதி பாராளுமன்ற தேர்தலுக்கு தயாராகி வரும் நிலையில் இந்த சட்டம் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்திற்கு கடுமையான அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றது எனவும் சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம் என்ற உத்தேச சட்டமூலம் இணையவழி துன்புறுத்தல்கள், மோசடி, துஷ்பிரயோகம் போன்றவற்றிற்கு எதிராக பாதுகாப்பை வழங்குகின்றது என தெரிவிக்கப்படுகின்ற போதிலும் அது புதிய இணையவழி பாதுகாப்பு ஆணைக் குழுவை ஏற்படுத்துவதையே பிரதான நோக்கமாக கொண்டுள்ளது என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

இந்த ஆணைக்குழுவை ஜனாதிபதி நியமிப்பார். குறிப்பிட்ட ஆணைக்குழு இணையத்தில் வெளியாகியுள்ள தவறான - பாதகமான தகவல் என தீர்மானித்து அதனை அகற்றலாம் எனவும் சர்வதேச மனிதஉரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

மேலும் இந்த ஆணைக்குழு இணையத்தை பயன்படுத்துவதை தடை செய்யலாம் தனிநபர்கள் அமைப்புகளுக்கு எதிராக நடவடிக்கைகளை எடுக்கலாம் எனவும் சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்ட நிபுணர்களுக்கு சந்தேகநபர்களின் வீடுகள், அலுவலகங்களை சோதனையிடுவதற்காக அதிகாரம் வழங்கப்படும். கடும் அபராதம், ஐந்து வருட சிறைத்தண்டனை போன்றவற்றை விதிக்கலாம் எனவும் சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது. (அ)



# ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் உள்ள 30 குடும்பங்களுக்கு நுளம்பு வலை

முல்லைத்தீவு, ஜன. 25

தன்னார்வ தொண்டாற்றும் இளைஞர்கள் பலர் இணைந்து பல்வேறு சமூக நலத்திட்டங்களை முன்னெடுத்துச் செல்லும் விதையனைத்தும் விருட்சமே அமைப்பின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் 30 குடும்பங்களுக்கு நுளம்புவலை வழங்கி வைக்கப்பட்டுள்ளது

விதையனைத்தும் விருட்சமே அமைப்பின் ஊடாக பிரான்ஸ் நாட்டில் வசிக்கும் இந்திரன் றஞ்சிதமலர் தம்பதிகளின் அறுபதாயிரம் ரூபா நிதி பங்களிப்பில் முல்லைதீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 30 குடும்பங்களுக்கு நுளம்பு வலை வழங்கும் நிகழ்வு நேற்று முன் தினம் இடம்பெற்றது

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கரிப்பட்டமுறிப்பு மற்றும் பனிக்கன் குளம் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளை சேர்ந்த 30 குடும்பங்களுக்கான நுளம்பு வலைகளை ஒட்டுசுட்டான் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் இ.றமேஸ், கிராம அலுவலர் த.தனபால்ராஜ், விதையனைத்தும் விருட்சமே உறுப்பினர்கள் இணைந்து மக்களுக்கு வழங்கினர். (அ)

# தனியார் துறையினருக்கு அடிப்படை சம்பளம் ரூ.21,000

## தொழில் அமைச்சு முன்மொழிவு

கொழும்பு, ஜன. 25

தனியார் துறை ஊழியர்களின் குறைந்தபட்ச ஊதியத்தை 12,500 ரூபாவிலிருந்து 21,000 ரூபாவாக அதிகரிக்க முன்மொழியப்பட்டுள்ளது.

தனியார் துறை ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பில் திறந்த மற்றும் பொறுப்புடைமை அரசாங்கம் தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு தொழில் அமைச்சிடம் இருந்து இது தொடர்பான முன்மொழிவு கிடைக்கப் பெற்றுள்ளது.

தனியார் துறை ஊழியர்களின் சம்பளப் பிரச்னை தற்போது தீவிரமாக எழுப்பப்பட்டுள்ளதாகக் துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் சுட்டிக்காட்டியதுடன், தனியார் துறை ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பதில் தொழிலாளர் அமைச்சின் தலையீடு எவ்வாறு மேற்கொள்ளப்படும் என்பது குறித்தும் விவரித்துள்ளார்.

தொழில் அமைச்சின் அதிகாரிகள் கருத்து வெளியிடுகையில், தனியார் துறையில் சம்பளம் பெறும் சுமார் 3 மில்லியன் ஊழியர்கள் மட்டுமே தொழிலாளர் சட்டத்தின் கீழ் உள்ளனர். மேலும் தனியார் துறையின் குறைந்தபட்ச ஊதியத்தை 12,500 ரூபாயில் இருந்து 21,000 ரூபாயாக உயர்த்த தொழில் அமைச்சு முன்மொழிந்துள்ளது." எனக் கூறியுள்ளார்.

# தேசிய அடையாள அட்டை எண்ணை ரின் இலக்கமாக மாற்ற நடவடிக்கை!

கொழும்பு, ஜன. 25

ஒருவரது தேசிய அடையாள அட்டை இலக்கத்தை ரின் எனப்படும் வரி செலுத்துவோர் அடையாள இலக்கமாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக இராஜாங்க நிதி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார். வழமையான வரி செலுத்துவோர் அடையாள இலக்கம் பெற்றுக் கொள்ளும் முறைமை நடைமுறையில் உள்ளது.

இந்தநிலையில் குறித்த வரி செலுத்துவோர் இலக்கத்தை பொதுமக்களுக்கு இலகுவாக வழங்குவது தொடர்பில் ஜனாதிபதியின் செயலாளருடனான இடம்பெற்ற கலந்துரையாடலை தொடர்ந்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார். (அ)

# வலம்புரி சங்குடன் 3 பேர் கைது!

மட்டக்களப்பு, ஜன. 25

வாகரை பொலிஸ் பிரிவில் வலம்புரி சங்குடன் 3 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக வாகரை பொலிசார் தெரிவித்தனர்.

வாகரை - திருமலை வீதியில் சென்ற வாகனமொன்றினை கதிரவெளி விசேட அதிரடிப் படையினர் மற்றும் பொலிஸார் இணைந்து திடீர் சோதனை நடத்தியபோது மறைத்து வைக்கப்பட்டிருந்த பெறுமதி வாய்ந்த வலம்புரிச் சங்கு கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வாகனத்தில் பயணித்த வெலிக்கந்தை பகுதியைச் சேர்ந்த 3 பேர் கைது செய்யப்பட்டதுடன், அவர்கள் பயணம் செய்த வாகனம் என்பன கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் மேலதிக விசாரணைகளின் பின்னர் வாகரை சுற்றுலா நீதிமன்றில் அவர்களை ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகவும் அவர்கள் கூறினர். (அ)

# அம்பாறை கரையோரப் பகுதிகளில் நுளம்புகளின் பெருக்கம் அதிகரிப்பு

## மக்களை அவதானமாக இருக்க கோரிக்கை

அம்பாறை, ஜன. 25

**அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களில் அண்மையில் ஏற்பட்ட மழையுடன் கூடிய காலநிலையை தொடர்ந்து நுளம்புகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதால் பொது மக்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறு சுகாதாரத் திணைக்களம் அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.**

மழையை தொடர்ந்து தற்போது வெயில் எரிப்பதால் நுளம்புகளின் தொல்லையும் இரவும் பகலும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

மழை காலங்களில் தாழ் நிலப்பிரதேசங்களில் தேங்கி நிற்கும் நீர் தற்போதும் வற்றாத நிலையில், வடிகால்களில் முறையாக நீர் வடிந்தோடாமையினாலும் நுளம்புகளின் தொல்லை அதிகரித்து டெங்கு காய்ச்சல் மற்றும் ஏனைய தொற்று நோய்கள் ஏற் படக் கூடிய ஆபத்தான நிலமை ஏற்படக்கூடிய நிலமை ஏற்பட்டுள்ளது.

பொது மக்களின் கவனக் குறைவு காரணமாக வீட்டு கழிவு நீரை வடிகாலுக்குள் செலுத்துவதனாலும், தேங்கி நிற்கும் நீரை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காத காரணத்தினாலும் இந்த நிலமை ஏற்பட்டுள்ளதாக சுகாதார வைத்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

விடுமுறை தினங்களிலும், ஓய்வு நேரங்களிலும் வீட்டின் சுற்றுப்புற சூழலை சுத்தப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் சுகாதார வைத்திய அதிகாரிகள் மேலும் பொது மக்களை கேட்டுள்ளனர். (அ)

# மட்டக்களப்பில் 13 நாள் சிசு பால் புரைக்கேறி உயிரிழப்பு

மட்டக்களப்பு, ஜன. 25

மட்டக்களப்பு, தலைமையக பொலிஸ் பிரிவைச் சேர்ந்த இருதயபுரம் பகுதயில் பிறந்து 23 தினங்களேயான பெண் குழந்தை பால் புரைக்கேறி பரிதாபகரமான முறையில் உயிரிழந்துள்ளது.

இச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றதாக மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த குழந்தை அஜித்குமார் அனோஜினி சம்பந்தமாக குழந்தையின் தாயிடம் விசாரிப்பதற்கு அவர் மன நிலை பாதிக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றது.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் குழந்தையை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தியபோது குழந்தை பால் புரைக்கேறியதால் உயிரிழந்துள்ளதாக சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக வைத்திசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (அ)

# கல்முனை மாநகர சபையால் சாய்ந்தமருதில் முன்னெடுக்கப்பட்ட வடிகால்கள் சுத்திகரிப்பு

அம்பாறை, ஜன. 25

அண்மையில் ஏற்பட்ட வெள்ள நீர் சீர் செய்யும் வகையில் சாய்ந்தமருது பிரதேசத்தில் வெள்ள நீரை துரிதமாக வடிந்தோடச் செய்வதற்காக கல்முனை மாநகர சபையினால் வடிகால்கள் மீண்டும் துப்பரவு செய்யப்பட்டு வருகின்றன.

இடர் நிலைமையைக் கருத்தில் கொண்டு கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல். எம். அஸ்மி அவர்களின் பணிப்புரையின் பேரில் பொறியியலாளர் ஏ.ஜே.ஏ.எச். ஜௌசியின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் வேலைகள் அத்தியட்சகர் வி. உதயகுமரன் அவர்களின் நெறிப்படுத்தலில் இரவு பகலாக இவ்வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

சுத்திகரிப்பு செய்யப்படுகின்ற வடிகான்களினுள் மீண்டும், கற்கள் மற்றும் மண்களை கூட்டித் தள்ளுவதைக் கண்டிப்பாகத் தவிர்த்துக் கொள்ளுமாறு கல்முனை மாநகர சபை பொதுமக்களை கேட்டுக் கொண்டுள்ளது. (அ)



# கிழக்கு பல்கலையில் சர்வதேச மாநாடு



மட்டக்களப்பு, ஜன. 25

இலங்கை, கிழக்குப் பல்கலைக்கழக பல்துறை ஆராய்ச்சிக்கான நிலையம் மற்றும் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் அத்துடன் இந்தியாவின் ஈ.எஸ்.என் பதிப்பகம் என்பன இணைந்து ஏற்பாடு செய்த 'நாளைய சவால்களுக்கான நிலைத்திருக்கும் தன்மை, புத்தாக்கம், இடைநிலை ஆராய்ச்சி' என்ற தலைப்பிலான சர்வதேச மாநாடு கிழக்குப் பல்கலைக்கழக நல்லையா மண்டபத்தில் நடைபெற்றது.

கிழக்குப் பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் வ. கனகசிங்கம் ஆரம்ப உரையாற்றிய இம்மாநாட்டில், தேசிய விஞ்ஞான மன்றத்தின் தலைவரும் றுகுணு பல்கலைக்கழக பயிர் விஞ்ஞானத்துறையைச் சேர்ந்த வாழ்நாள் பேராசிரியருமான ரஞ்சித் சேனாரத்ன பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

கிழக்குப் பல்கலைக்கழக பேராசிரியர் ஏ.ஜி.ஜோான் பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், இந்தியாவின் ஈ.எஸ்.என் பதிப்பகத்தின் நிறுவுநரும் அதன் தவிசாளருமான கலாநிதி. ஜே.பானுசந்தர், மட்டக்களப்பு அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளருமான திருமதி. ஜே.ஜே.முரளிதரன் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டனர். (அ)

# வவுனியாவிலிருந்து மட்டக்களப்புக்கு கஞ்சா கடத்திய நான்கு பேர் சிக்கினர்!

மட்டக்களப்பு, ஜன. 25

வவுனியாவில் இருந்து மோட்டார் சைக்கிளில் மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடிக்கு 845 கிராம் கஞ்சா போதைப்பொருளை கடத்திச் சென்ற வியாபாரிகளிடம் கஞ்சா வாங்கச் சென்ற வியாபாரிகள் உட்பட 4 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களை களுவாஞ்சிக்குடியில் வைத்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கைது செய்ததுடன் ஒரு மோட்டார் சைக்கிள், ஒரு ஓட்டோ ஆகியவற்றை கைப்பற்றியுள்ளதாக களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றின் பிரகாரம் களுவாஞ்சிக்குடி பொலிஸ் பொறுப்பதிகாரியின் வழிகாட்டலில் பெரும் குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் களுவாஞ்சிக்குடி கடற்கரையில் சம்பவதினமான திங்கட்கிழமை மாலை கண்காணிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

இதன்போது அந்த பகுதியில் ஓட்டோ ஒன்றில் களுவாஞ்சிக்குடி பிரதேசத்தைச் சேர்ந்த இரு வியாபாரிகள் சென்று காத்துக்கொண்டிருந்த நிலையில் வவுனியாவில் இருந்து மோட்டார் சைக்கிள் ஒன்றில் கஞ்சாவை கடத்தி வந்த இருவர் காத்திருந்த வியாபரிகளிடம் கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது அவர்களை மாறு வேடத்தில் இருந்த பொலிஸார் சுற்றிவளைத்து 4 பேரை கைது செய்ததுடன் 845 கிராம் கஞ்சா, கடத்தலுக்கு பயன்படுத்திய மோட்டார் சைக்கிள், ஓட்டோ என்பவற்றை மீட்டனர்.

இதில் கைது செய்யப்பட்டவர்களை வ நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# பதிலீடின்றி மேற்கொள்ளப்பட்ட வைத்தியரின் இடமாற்றத்தை உடனடியாக ரத்து செய்யவும்!

## கிழக்கு ஆளுநருக்கு பல அமைப்புக்கள் இணைந்து கோரிக்கை

திருகோணமலை, ஜன. 25

திருகோணமலை மாவட்ட - புல்மோட்டை தள வைத்தியசாலையில் மாவட்ட வைத்திய அதிகாரியாக கடமையாற்றி வருகின்ற வைத்தியர் எம்.எ. எம்.மொஹைதீனின் வருடாந்த இடமாற்றத்தில் அவருக்குப் பதிலாக எந்த பதிலீடுகளும் இல்லாமல் மேற்கொள்ளப்பட்டு வருவதை நிறுத்தக்கோரி புல்மோட்டை பிரதேசத்திலுள்ள பல அமைப்புக்களும், பொதுமக்களும் இணைந்து கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

புல்மோட்டை காட்டுத்தென்னை விவசாய சம்மேளனம் மற்றும் அல் - மஸ்ஜிதுல் நூறானியா பள்ளிவாசல் நிர்வாகம் உள்ளிட்ட அப்பிரதேச மக்கள் இணைந்து இந்த கோரிக்கை அடங்கிய கடிதங்களை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானிடம் கையளித்து வைத்துள்ளதாக குறித்த அமைப்புக்களும் அப்பிரதேச மக்களும் தெரிவித்தனர்.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: -

எங்களது பிரதேசத்தில் அமைந்துள்ள தள வைத்தியாலைக்கு 7 வைத்தியர்களுக்கான வெற்றிடம் காணப்படுகின்ற போது, இங்கு 3 வைத்தியர்கள் மாந்திரமே கடமை புரிந்து வருகின்றனர். இந்நிலைமையில், மாவட்ட வைத்திய அதிகாரியாக கடமையாற்றி வருகின்ற வைத்தியர் எம்.எ.எம்.மொஹைதீனின் வருடாந்த இடமாற்றத்தில் அவருக்குப் பதிலாக எந்த பதிலீடுகளும் இல்லாமல் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற இந்த இடமாற்றத்தை எங்களால் ஏற்றுக் கொள்ள முடியாது.

ஏலவே புல்மோட்டை மக்கள் தொகைக்கேற்ப வைத்தியர்கள் பற்றாக் குறையாக காணப்படும் இச்சந்தர்ப்பத்தில் பதிலீட்டு வைத்தியர் ஒருவர் நியமிக்கப்படாமல் தரமுடைய ஒரு வைத்தியரை இடமாற்றம் செய்வதென் பது 18 ஆயிரத்திற்கும் மேற்பட்ட புல்மோட்டை கிராம மக்களுக்கு செய்யும் பாரிய அநீதியாகும் என்றும் அதில் சுட்டிக்காட்டியுள்ளதாகவும் தெரிவித்தனர்.

வைத்தியர் எம்.எ.எம்.மொஹைதீன் என்பவர் அவருடைய சேவைக் காலத்தில் மிகவும் சிறப்பான வைத்திய சேவையை காலநேரம் பாராது செய்து வருவதுடன் புலமோட்டை கிராம மக்களின் நன்மதிப்பையும் வென்றவருமாவார். அது மட்டுமில்லாமல் கொவிட்-19 காலப்பகுதியில் வைத்தியர்கள் ஒருவருமே இல்லாத சந்தர்ப்பத்தில் தன்னுயிரையும் பாராது தனியாளாக நின்று விடுமுறையும் பெற்றுக்கொள்ளாமல் மக்களுக்காக தன்னை அர்ப்பணித்த வைத்தியர் ஒருவராவார். அக் காலப்பகுதியில் அவர் செய்த தியாகங்களையும், வைத்திய சேவையையும் எங்களால் இலகுவில் மறந்துவிட முடி யாது.

எனவே வைத்தியர் எம்.எ.எம். மொஹைதீனின் இந்த இடமாற்றத்தினை ரத்துச் செய்து புல்மோட்டைத் தள வைத்தியசாலைக்கு அவரின் சேவையை தொடர்ச்சியாக பெற்றுத்தருமாறு கேட்டுக்கொள்கிறோம் - என்றுள்ளது.

(அ)

# பலஸ்தீன தேசம் அமையாவிட்டால் இஸ்ரேலை அங்கீகரிக்கமாட்டோம்

## சவுதி அரேபியா திட்டவட்டம்




நியாத், ஜன. 25

தனி பலஸ்தீன தேசம் அமைவதற்கான பாதை வகுக்கப்படாவிட்டால், இஸ்ரேலை ஒரு நாடாக அங்கீகரிக்கப் போவதில்லை என சவுதி அரேபியா திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் பெரு முயற்சியின் பலனாக நீண்ட காலம் பகை நாடுகளாக இருந்து வந்த இஸ்ரேலுக்கும், சவுதி அரேபியாவுக்கும் இடையே சுமூக உறவு ஏற்படுவதற்கான சூழல் ஏற்பட்டு வந்தது.

இந்த நிலையில், தனி பலஸ்தீன தேசம் அமைவதை ஏற்க முடியாது என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கூறியதைத் தொடர்ந்து சவுதி அரேபியா இவ்வாறு தெரிவித்துள்ளது.

தனி பலஸ்தீனம் அமைவதற்கான நம்பிக்கையை அளிக்கக் கூடிய, பழைய நிலைக்கு மீண்டும் திரும்ப முடியாத நகர்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டியது மிக அவசியம் எனவும் அத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிட்டால், இஸ்ரேலுடன் தூதரக உறவை சகஜமாக்குவதற்கான பேச்சு வார்த்தை மேற்கொள்ளப்படமாட்டாது எனவும் வுதி இளவரசரும் வெளியுறவுத் துறை அமைச்சருமான பைசல் பின் பர்ஹான் அல் சவுத், சி.என்.என் தொலைக்காட்சிக்கு அளித்த செவ்வியில் கூறியுள்ளார்.

போருக்குப் பிந்தைய காஸாவின் மீள் கட்டுமான பணிகளுக்கு சவுதி அரேபியா உதவிகளைச் செய்யும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பலஸ்தீன பகுதியில் நீண்ட காலமாக குடியேறி வந்த யூதர்கள், இஸ்ரேல் உருவாக்கத்தை 1948 ஆம் ஆண்டு பிரகடனம் செய்தார்கள். அதனை ஐ.நா. அங்கீகரித்தது. இருந்தாலும், இதனை பலஸ்தீன தேசியவாத அமைப்புகளும், ஏராளமான முஸ்லிம் நாடுகளும் அங்கீகரிக்கவில்லை.

இஸ்ரேலும், பலஸ்தீனர்களின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளை தனி பாலஸ்தீன நாடாக அங்கீகரிக்க மறுத்து வருகிறது.

இந்த சூழலில், ஒரு தனி பலஸ்தீன நாட்டுக்கு இஸ்ரேலும், இஸ்ரேலுக்கு எதிர்த் தரப்பினரும் அங்கீகாரம் வழங்கி இரண்டும் தனித் தனி சுதந்திர நாடுகளாக செயல்படுவதே பலஸ்தீன பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு என்று பல நாடுகள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன. (அ)



# சுவிட்சர்லாந்தில் வாடகை தொடர்ந்து உயர்வடைகிறது

பேர்ண், ஜன. 25

சுவிட்சர்லாந்தில் வாடகைத் தொகை தொடர்ச்சியாக உயர்வடைந்து வருவதாக ஆய்வுகளில் தெரியவந்துள்ளது. கடந்த 2022ஆம் ஆண்டை விடவும் கடந்த 2023ஆம் ஆண்டில் வேகமாக வாடகைத் தொகை உயர்வடைந்துள்ளது.

கடந்த ஆண்டில் மாத்திரம் 4.7 வீதமாக வாடகைத் தொகை உயர்வடைந்துள்ளது. 2009ஆம் ஆண்டின் பின்னர் அதிகளவு தொகை வாடகை உயர்வடைந்த ஆண்டாக இது கருதப்படுகின்றது.

85 வீத சுவிஸ் நகராட்சிகளில், 2023 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் நடுத்தரத் அடுக்குமாடி குடியிருப்புகளுக்கான வாடகை முந்தைய ஆண்டை விட 3% அதிகரித்துள்ளன.

வாடகை சந்தையானது தொடர்ச்சியாக அதிகரிப்பினை பதிவு செய்து வருவதால் இங்கு வாழும் நடுத்தர மற்றும் புலம்பெயர் மக்கள் கடுமையான பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளனர்.

சுவிட்சர்லாந்தின் பல்வேறு நகரங்களில் இலங்கை மற்றும் இந்தியாவில் இருந்து தமிழர்கள் அதிகமாக புலம்பெயர்ந்து வாழ்கின்றனர். பெரும்பாலானவர்கள் இங்கு வாடகை வீடுகளிலேயே தங்கியுள்ளனர்.

ஏற்கனவே, சுவிட்சர்லாந்தில் மக்களின் வாழ்க்கைச் செலவுகளில் கொவிட் தொற்றுக்கு பின்னர் அதிகரித்துள்ள பின்புலத்தில் தற்போது வாடகை கட்டணங்களும் அதிகரித்து வருவதால் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிட்டுள்ளதால் இங்கு வாழும் புலம்பெயர் தமிழ் மக்கள் கவலை வெளியிடுகின்றனர். (அ)

# ஹமாஸ் தாக்குதலில் ஒரே நாளில் 24 ரஷ்யப் படையினர் உயிரிழப்பு!

காஸா, ஜன. 25

மத்திய காஸா பகுதியில் இஸ்ரேல் இராணுவத்தினர் மீது ஹமாஸ் ஆயுதக் குழுவைச் சேர்ந்தவர்கள் வெடிகுண்டு வீசி தாக்குதல் நடத்தியிருக்கின்றனர்.

இந்தத் தாக்குதலில் 24 இராணுவ வீரர்கள் உயிரிழந்ததாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் இஸ்ரேல் பிரதமர் நெத்தன்யாகு தெரிவிக்கை யில், போர் தொடங்கி யதில் இருந்து, இந்த நாள் மிக கடினமான நாட்களில் ஒன்று. முழுமையான வெற்றி கிடைக்கும் வரை நாங்கள் போராடுவதை நிறுத்த மாட்டோம்" என தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடந்த 3 மாதமாக நடந்துவரும் போரில், இது மிகவும் மோசமான தாக்குதல் என இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.



காஸா மீதான இஸ்ரேலிய தாக்குதல்களில் 25,490 பேர் கொல்லப்பட்டனர். மேலும் 63, 000 பேர் காயமடைந்துள்ள னர். ஹமாஸ் தாக்குதலில் இறந்தவர்களின் எண்ணிக்கை 1,139 ஆக உயர்ந்துள்ளது.

(அ)

# ஈராக்கில் ஈரான் சார்புக் குழுக்களின் நிலைகள் மீது அமெரிக்கா தாக்குதல்!

பக்தாத், ஜன. 25

ஈராக்கில் ஈரான் சார்பு ஆயுதக்குழுக்களின் மூன்று நிலைகளை தாக்கியுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

ஈராக்கில் கட்டாப் ஹெஸ்புல்லா குழுவுக்கு எதிராகவும் ஏனைய ஈரான் சார்பு குழுக்களிற்கு எதிராகவும் தாக்குதல்களை மேற்கொண்டதாக அமெரிக்க பாதுகாப்பு செயலாளர் தெரிவித்துள்ளார்.

ஈராக்கிலும் சிரியாவிலும் உள்ள அமெரிக்க ஏனைய நாடுகளின் படையினருக்கு எதிரான தாக்குதலிற்கு பதிலடியாகவே இந்தத் தாக்குதலை மேற்கொண்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் நலன்களை பாதுகாப்பதற்காக ஜனாதிபதியும் நானும் மேலதிக நடவடிக்கைகளை எடுக்க தயங்கப் போவதில்லை எனவும் அமெ



ரிக்க பாதுகாப்பு செயலாளர் தெரிவித்துள்ளார்.

பிராந்தியத்தில் மோதல்களை விஸ்தரிக்க நாங்கள் விரும்பவில்லை எங்கள் மக்களையும் எங்கள் நலன்களையும் பாதுகாப்பதற்கான மேலதிக நடவடிக்கைகளை எடுக்க தயாராகவுள்ளோம் இந்த குழுக்களையும் அவர்களிற்கு ஆதரவுவழங்கும் ஈரானியர்களையும் தாக்குதல்களை நிறுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம் எனவும் அமெரிக்க பாதுகாப்பு செயலாளர் லொயிட் ஒஸ்டின் தெரிவித்துள்ளார்.

(அ)

# இந்தியாவுக்கு ஐ.நா பாதுகாப்பு சபையில் நிரந்தர இடம் இல்லாதமை அபத்தமானது

## எலான் மஸ்க் கூறுகிறார்

லண்டன், ஜன. 25

உலகிலேயே அதிக மக்கள் தொகை கொண்ட இந்தியாவிற்கு, ஐ.நா., பாதுகாப்பு சபையில் நிரந்தர இடமில்லாதது அபத்தமானது என டெஸ்லா மற்றும் எக்ஸ் சமூக வலைத்தளத்தின் உரிமையாளர் எலான் மஸ்க் கூறியுள்ளார்.

ஐ.நா., பாதுகாப்புச் செயலர் அன்ரனியோ குட்டரெஸ் எக்ஸ் சமூக வலைத்தளத்தில் வெளியிட்ட பதிவில், பாதுகாப்பு கவுன்சிலில் ஆப்ரிக்காவுக்கு இன்னும் ஒரு நிரந்தர உறுப்பினர் இல்லை என்பதை நாம் எப்படி ஏற்க முடியும். சர்வதேச அமைப்புகள், இன்றைய உலகத்தை பிரதிபலிப்பதாக இருக்க வேண்டும். 80 ஆண்டுகளுக்கு முன்பு இருந்தது போல் இருக்கக்கூடாது.

செப்ரெம்பர் மாதம் நடக்க உள்ள ஐ.நா., உச்சி மாநாடானது, உலகளாவிய நிர்வாக சீர்திருத்தங்களை பரிசீலிப்பது மற்றும் நம்பிக்கையை மீண்டும் உருவாக்குவதற்கான ஒரு வாய்ப்பாக இருக்க வேண்டும் எனக்கூறியிருந்தார்.

இதற்கு பதிலளித்து எலான் மஸ்க் வெளியிட்ட பதிவில் கூறியுள்ளதாவது:

ஐ.நா., அமைப்புகளை சீர்திருத்தம் செய்ய வேண்டும். ஆனால், அதில் உள்ள பிரச்னை என்னவென்றால், அதிக அதிகாரம் வைத்துள்ளவர்கள், அதனை விட்டு தர விரும்பவில்லை. உலகிலேயே அதிக மக்கள் தொகை கொண்ட நாடாக இருந்தாலும் ஐ.நா., பாதுகாப்பு சபையில் இந்தியாவுக்கு நிரந்தர இடம்



இல்லை என்பது அபத்தமானது. ஆப்ரிக்காவுக்கும் நிரந்தர இடம் கொண்டிருக்க வேண்டும் - என்றுள்ளது.

(அ)

# சர்வதேச சமூகத்தில் அரசு மீது நம்பிக்கை!

## கூறுகின்றார் சாகல ரத்நாயக்க

கொழும்பு, ஜன. 25

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் ஆரம்பிக்கப்பட்ட சரியான பொருளாதார வேலைத்திட்டத்தினால் சர்வதேச சமூகத்தில் இலங்கையின் பொருளாதாரத்தின் மீதான நம்பிக்கையைக் கட்டியெழுப்ப முடிந்துள்ளது என தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற '2024 வரவு-செலவுத்திட்டம்' கருத்தரங்கின் போது சாகல ரத்நாயக்க இவ்வாறு தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டைப் பொறுப்பேற்ற போது நாட்டில் கடுமையான பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருந்தது. எரிபொருள் வரிசைகள், எரிவாயு வரிசைகள் மற்றும் மணிக் கணக்கில் மின் வெட்டு ஏற்பட்டது. அப்போது அமுல்படுத்தப்பட்ட வரிக் கொள்கையால், அரச வருமானம் சரிவு, தவறான விவசாயக் கொள்கை, வரிக் கோப்புகள் குறைப்பு போன்ற காரணிகளால் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது.

கொவிட் நோய்த்தொற்று காரணமாக சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைந்ததால், அந்நியச் செலாவணியும் வீழ்ச்சியடைந்தது. தொடர்ந்து நடந்த போராட்டத்தால், பொருளாதாரச் சரிவு உச்சத்தை எட்டியது. இதன் காரணமாக வாழ்க்கைச் செலவு அதிகரித்தது. மக்கள் தொழில்களை இழந்தனர். இவ்வாறானதொரு நெருக்கடி நிலையிலேயே தற்போதைய ஜனாதிபதி நாட்டைப் பொறுப்பேற்றார்.

அவர் விவசாயக் கொள்கையை மாற்றி அரிசி உற்பத்தியைப் பெருக்கினார். இதனால் உணவுத் தட்டுப்பாடு குறைந்தது. சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்தாலோசித்து இலங்கையின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தும் புதிய வேலைத் திட்டத்திற்கு இணக்கம் காணப்பட்டது. அதன்படி, நிதி சீர்திருத்தங்கள், சட்ட மறுசீரமைப்புகள் மற்றும் நிர்வாக சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

அதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை துரிதமாக ஸ்திரப்படுத்தும் வேலைத் திட்டத்தில் அரசாங்கம் இறங்கியது. புதிய வரி விதிப்பினால் மக்கள் மீது சில அழுத்தங்கள் ஏற்பட்டுள்ளதை ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆனால், இந்த நடவடிக்கையில் இலங்கையின் பொருளாதாரம் வலுவடைந்து வருகிறது. இலங்கை மீது சர்வதேச நம்பிக்கை ஏற்பட்டுள்ளது-என்றார். (அ)



# இந்தியத் தூதுவருடன் அநுரகுமார சந்திப்பு

கொழும்பு, ஜன. 25

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க புதிய இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜாவை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

கொழும்பில் உள்ள இந்தியன் இல்லத்தில் நேற்று முன்தினம் இந்த சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பின்போது இலங்கையின் சமகால அரசியல் நிலவரங்கள் குறித்தும், பொருளாதார நெருக்கடி தொடர்பாகவும், தேசிய மக்கள் சக்தியின் எதிர்கால அரசியல் வேலைத் திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத்தும் இந்த சந்திப்பில் கலந்துகொண்டார். (அ)

# இ.போ.ச. - தனியார் பஸ்களின் சாரதிகள், நடத்துநர்கள் மோதல்

## நால்வர் வைத்தியசாலையில் அனுமதி

வவுனியா, ஜன. 25

வவுனியா புதிய பஸ் நிலையத்தில் நேற்று முன் தினம் அதிகாலை இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் சாரதி, நடத்துநருக்கும், தனியார் பஸ் சாரதி, நடத்துநருக்கும் இடையே ஏற்பட்ட மோதல் காரணமாக நால்வர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா புதிய பஸ் நிலையத்துக்கு முன்பாக வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் தனியார் பஸ் தரித்து நின்றுள்ளது. இதன்போது கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ்ஸூம் வருகை தந்து புதிய பஸ் நிலையத்திற்கு முன்பாக தரித்து நின்றுள்ளது.

இதன்போது இரு பஸ்ஸின் ஊழியர்களுக்கிடையே நேரசூசி தொடர்பில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டதுடன் இ.போ.ச பஸ்ஸின் லைட்டும் உடைக்கப்பட்டது.

இதனையடுத்து அவர்களுக்கிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் மோதலாக மாறியதில் இ.போ.ச, தனியார் பஸ்களின் நடத்துநர்கள், சாரதிகள் என நால்வரும் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

சம்பவ இடத்திற்கு சென்ற வவுனியா பொலிஸார் இரு பஸ்களையும் வவுனியா பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் சென்றனர். (அ)

# ஆசிரிய உதவியாளர்களுக்கு நிரந்தர நியமனம் வேண்டும்

## வடிவேல் சுரேஷ் கோரிக்கை

கொழும்பு, ஜன. 25

ஆசிரிய உதவியாளர்களுக்குரிய நிரந்தர நியமனம் வழங்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான வடிவேல் சுரேஷ் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

தொடர்ந்தும் ஆசிரியர் உதவியாளர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. பல வருட காலமாக உதவி ஆசிரியர்களாக பணி புரிந்தும் கூட அவர்களை நிரந்தர சேவையில் இணைக்காமல் இருப்பதினாலும் அவர்களுக்குரிய முறையான கொடுப்பனவு வழங்கப்படாமையினாலும் பல இன்னல்களை எதிர்கொண்டுள்ளனர்.

அரசாங்கமும் கல்வி அமைச்சும் ஒன்றிணைந்து உடனடியாக இதற்கு தீர்வு வழங்க வேண்டும். மலையகத்தைப் பொறுத்தவரை ஆசிரியர் வெற்றிடங்கள் பரவலாக காணப்படுகின்றது.

அரசாங்கத்தின் ஊடாக 3,000 உதவி ஆசிரியர்களை வெற்றிடங்களுக்கு நியமிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அது வரவேற்கத்தக்க விடயமாக இருந்தபோதிலும் தற்சமயம் உதவி ஆசிரியர்களாக சேவை புரிபவர்களின் பிரச்னைகளை சுமூகமாக தீர்த்து வைத்த பின்னரே புதிய நியமனங்களை மேற்கொள்ளவேண்டும்.

அத்தோடு பொறிமுறை ஒன்றினூடாகவே இவ் நியமனங்களும் வழங்கப்பட வேண்டும். குறித்த விடயம் தொடர்பில் பாராளுமன்றம் மற்றும் ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு செல்லவுள்ளோம்-என்றார். (அ)



# 7 கோடி ரூபா மின்சாரக் கட்டணத்தை பாராளுமன்றம் செலுத்தவில்லை என்பது முற்றிலும் அடிப்படையற்றது

## அமைச்சர் காஞ்சன விஜேசேகர கூறுகிறார்

கொழும்பு, ஜன. 25

ஏழு கோடி ரூபா மின்கட்டணத்தை பாராளுமன்றம் செலுத்தவில்லை என பாராளுமன்றத்தை அவமதிக்கும் வகையில் பொய்யான குற்றச்சாட்டை முன்வைத்துள்ள தொழிற்சங்க தலைவர் ரஞ்சன் ஜயலாலை பாராளுமன்ற சிறப்புரிமை மற்றும் ஒழுக்கவியல் குழுவுக்கு அழைத்து உரிய சட்ட நடவடிக்கைகளை எடுங்கள் என மின்சாரத்துறை மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர சபாநாயகரிடம் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற அமர்வின்போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஏழு கோடி ரூபா மின்கட்டணத்தை பாராளுமன்றம் செலுத்தவில்லை என சமூக வலைத்தளங்களிலும் பத்திரிகைகளிலும் பொய்யான செய்தி வெளியாகியுள்ளன. இந்த செய்தியை தொடர்ந்து நான் ஆராய்ந்து பார்த்தேன். ஒவ்வொரு மாதமும் பாராளுமன்றத்தின் மின்கட்டணம் செலுத்தப்படுகிறது.

அதேபோல் ஜனாதிபதி செயலகத்தின் மின்கட்டணமும் முறையாக செலுத்தப்படுகிறது. எவ்வித நிலுவை கட்டணங்களும் இல்லை. ஆகவே பாராளுமன்றத்தை அவமதிக்கும் வகையில் உண்மைக்கு புறம்பான விடயத்தை குறிப்பிட்டுள்ள தொழிற்சங்க தலைவர் ரஞ்சன் ஜயலாலை பாராளுமன்ற சிறப்புரிமைகள் மற்றும் ஒழுக்கவியல் குழுவுக்கு அழைத்து உரிய சட்ட நடவடிக்கை எடுங்கள்-என்றார். (அ)

# முதியவரை ஏமாற்றி தம்பதி பண மோசடி

கிளிநொச்சி, ஜன. 25

கிளிநொச்சி பகுதியில் வங்கி ஊழியரான பெண் ஒருவரும் அவரது கணவரும் இணைந்து, முதியவரை ஏமாற்றி சுமார் 6 இலட்சம் ரூபா பணத்தை மோசடி செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் தனியார் வங்கி ஒன்றில் பணிபுரியும் வங்கி உத்தியோகத்தரும் அவரது கணவனும் இணைந்து முதியவர் ஒருவரிடம் மூன்று இலட்சத்து ஐம்பாயிரம் ரூபா மற்றும் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா என ஆறு இலட்சம் ரூபா பணத்தை மோசடியாகப் பெற்று குறித்த முதியவரை ஏமாற்றியுள்ளத்துடன் அதற்கு பதிலாக மறுக்கப்பட்ட காசோலையினையும் வழங்கியுள்ளனர்.

இவ்வாறு பாதிக்கப்பட்ட முதியவரால் கிளிநொச்சி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து பொலிஸார் இருவருக்கும் எதிராக கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

அத்துடன் இரண்டு பேரையும் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நீதிமன்ற அனுமதியை கோரியுள்ளனர்.

குறித்த வங்கி ஊழியரும் அவரது கணவரும் ஏற்கனவே பலரை ஏமாற்றி மோசடி குற்றச்சாட்டுகளில் ஈடுபட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விடுதலை...

நடத்தப்பட்டு புதிய தலைவர் நியமிக்கப்படுவார்" என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தத் தகவலை நேற்றைய தினம் ஆனந்தசங்கரி தெரிவித்திருந்தார் என்று இணையத்தளம் ஒன்று தெரிவித்திருந்தது.

ரட்ணஜீவன் கூல் கடந்த ஆட்சியில் தேர்தல் ஆணைக்குழு உறுப்பினராக பதவி வகித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பல்லாயிரம்...

கும்பாபிஷேகம் ஆரம்பமானது.

நூற்றுக்கும் மேற்பட்ட அந்தணர்கள் வேத மந்திரங்கள் முழங்கியவாறு கும்பங்களை தலையில் சுமந்து சென்றனர். இதனையடுத்து ட்ரோன்கள் மூலமாக பூக்கள் தூவப்பட்டன. தொடர்ந்து கலசங்கள் பொருத்தப் பட்டு, கும்ப நீரால் அபிஷேகம் செய்யப்பட்டது.

அத்துடன், இந்த கும்பாபிஷேக நிகழ்வில் யானை, குதிரை என்பன வரவழைக்கப்பட்டிருந்தன. இந்நிலையில், இன்று முதல் தொடர்ந்து 45 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேக பெருநிகழ்வில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் வருகை தந்திருந்தனர். பக்தர்களின் வசதி கருதி இலவச படகு சேவையும் நடத்தப்பட்டது. (ஐ)

## நிகழ்நிலை...

வாக்கெடுப்பில் நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்துக்கு ஆதரவாக 108 வாக்குகளும் எதிராக 62 வாக்குகளும் அளிக்கப்பட்டன. இதனால், 46 மேலதிக வாக்குகளால் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டது.

இதேநேரம், 54 பாராளுமன்ற உறுப்பினர்கள் வாக்களிப்பில் பங்கேற்கவில்லை.

இதேநேரம், சட்ட மூலத்துக்கு ஆதரவாக சிறீ லங்கா சுதந்திரக்கட்சி எம்.பியான துமிந்த திஸநாயக்க, சுயாதீன எதிரணி எம்.பியான நிமல் லான்ஸா, அலி சப்ரி ரஹீம், ஜோன் செனவிரத்ன ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி.யான வடிவேல் சுரேஷ் ஆகியோர் ஆதரவாக வாக்களித்தனர்.

அரச தரப்பு எம்.பியான ரொஷான் ரணசிங்க எதிராக வாக்களித்தார். (ஐ)

## கிளிநொச்சியில்...

வெஸ்லி அலன் கத்தரின் கவிதா (வயது 50) என்பவரே உயிரிழந்தார்.

இந்த விபத்துக் குறித்து மேலும் அறிய வருவதவது,

யாழ்ப்பாணத்தில் இருந்து கண்டி நோக்கி சென்ற இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்து வீதியில் சென்ற எருமை மாடுகளை மோதித் தள்ளியவாறு வீதியின் மறு கரைக்கு சென்றுள்ளது. இதன்போது, மாடுகளை கொண்டு சென்றவர் படுகாயங்களுக்கு உள்ளானார்.

அந்தச் சமயம், எதிரே கொழும்பில் இருந்து பயணிகளுடன் வந்த ஹைஏஸ் வாகனத்தை மோதியது. இதில், ஹைஏஸில் வந்த பெண் உயிரிழந்தார். சிறுவர்கள் இருவர் உட்பட 7 பேர் காயமடைந்தனர்.

உயிரிழந்த பெண் கணவரையும் மகனையும் வெளிநாட்டுக்கு அனுப்பி விட்டு வீட்டுக்கு திரும்பிக் கொண்டிருந்தார் என்று தெரியவந்தது.

காயமடைந்தவர்களில் ஒருவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையிலும் நால்வர் கிளிநொச்சி மருத்துவமனையிலும் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர். ஏனைய மூவரும் நோயாளர் விடுதியில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை, இந்த விபத்தில் சிக்கி 8 மாடுகளும் உயிரிழந்தன. 4 மாடுகள் காயமடைந்துள்ளன.

விபத்து குறித்து கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## படகை...

சம்பவத்துடன் தொடர்புடைய 7 பேருக்கே மரண தண்டனை அளிக்கப்பட்டது.

இதேநேரம், இந்த வழக்கின் பத்தாவது குற்றவாளியை அனைத்து குற்றச்சாட்டுகளில் இருந்தும் விடுவித்து நீதிபதி உத்தரவிட்டார்.

மரணதண்டனை விதிக்கப்பட்டவர்களுக்கு மூன்று குற்றச்சாட்டுகளுக்கு மேலதிகமாக ஆறு குற்றச்சாட்டுகளுக்கு 29 வருட கடூழிய கடூழிய சிறைத்தண்டனை விதித்த நீதிபதி, அவர்களுக்கு தலா 20 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பதினொரு பிரதிவாதிகளுக்கு எதிராக சட்டமா அதிபர் கொழும்பு மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார். பிரதிவாதிகளில் மூவர் வழக்கு விசாரணையின் போது அல்லது அதற்கு முன்னரே மரணமடைந்தனர். 8 பிரதிவாதிகளுக்கு எதிராக நீதிமன்றில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. (ஐ)

## ஊசிமூலம்...

பிரேத பரிசோதனையில் உடலில் அதிகளவான ஹெரோயின் போதைப் பொருளை உடலில் செலுத்தியமையே மரணத்துக்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

பொலிஸாரின் விசாரணையில் மரணமான இளைஞர் கலட்டி பகுதியில் மற்றொருவருடன் மது அருந்திக் கொண்டிருந்தார். மேலும் போதைக்காக அவர் ஊசி மூலம் ஹெரோயின் போதைப் பொருளை செலுத்தியுள்ளார். இதையடுத்து அவர் அங்கேயே விழுந்து மரணமானார். இதில் தலையில் காயங்கள் ஏற்பட்டன என்று கூறப்பட்டது.

ஒட்டுமடத்தை சேர்ந்த சிவசேத நாதன் கோபிநாதன் (வயது -27) என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, கடந்த ஆண்டு ஊசி மூலம் ஹெரோயின் செலுத்திய 15 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பிரபாகரனுடன்...

இவர் புலம்பெயர்ந்து பிரான்ஸில் வாழ்ந்து வந்த நிலையில் தனது 71ஆவது வயதில் காலமானார்.

1970களில் சிறீ லங்கா சுதந்திர கட்சி தலைமையிலான ஐக்கிய முன்னணியின் ஆட்சிக் காலத்தில் தமிழ் மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதியை கட்டுப்படுத்தும் வகையில் இனவாரியான சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இதே சமயம், புதிய அரசமைப்பு சட்டம் கொண்டு வரப்பட்டது. இவற்றுக்கு எதிராக தமிழ் மாணவர்கள் போராட்டங்களில் ஈடுபட்டனர். இதன்போது, அரசுக்கு சார்பானவர்களின் வீடுகள் மீது குண்டெறிதல், அரச பேருந்துகள் - வாகனங்கள் எரிப்பு போன்றவற்றில் தமிழ் இளைஞர்கள் ஈடுபட்டனர். இவ்வாறான சம்பவம் ஒன்றில் ஈடுபட்டு தமிழ்நாட்டில் தஞ்சமடைந்த கிருபா தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவருடனான தொடர்புகளின் பின்னர் நாடு திரும்பினார்.

நாடு திரும்பிய அவர் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் இணைந்து இயங்கினார். அல்பிரட் துரையப்பாவை 1975 ஜூலை 27ஆம் திகதி பிரபாகரன் சுட்டுக் கொன்றபோது, அவருடன் துணைநின்ற நால்வரில் கிருபநாதனும் ஒருவராக அறியப்படுகின்றார்.

துரையப்பா கொலை வழக்கில் தேடப்பட்டு வந்த அவர், பின்னர் கைது செய்யப்பட்டார். பின்னர் புலம் பெயர்ந்து பிரான்ஸ் நாட்டில் வாழ்ந்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

கிருபநாதனின் இறுதிக் கிரியைகள் எதிர்வரும் 31ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது. (ஐ)

# டெங்கு நோயை கட்டுப்படுத்த யாழில் விழிப்புணர்வு பேரணி



யாழ்ப்பாணம், ஜன. 25

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அதிகரித்து வரும் டெங்கு நோயை கட்டுப்படுத்தும் நோக்கில் விழிப்புணர்வு நடைபவனி நேற்று புதன்கிழமை நடைபெற்றது.

வடக்கு மாகாண சுகாதார திணைக்களத்தின் ஏற்பாட்டில் நேற்று காலை திருநெல்வேலி சந்தியில் ஆரம்பித்த டெங்கு நோய் விழிப்புணர்வு நடை பவனி பலாலி வீதி வழியாக பரமேஸ்வரா சந்தியை அடைந்து அங்கிருந்து யாழ்ப்பாண பல்கலைக்கழக பிரதான நுழைவாயில் வரை நடைபெற்றது.

இந்த விழிப்புணர்வு நடைபவனியில் வடமாகாண சுகாதார பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி, யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆறுமுகம் கேதீஸ்வரன், நல்லூர் பிரதேச செயலாளர் திருமதி யசோதா உதயகுமார், நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி, கோப்பாய் பொலிஸார், சுகாதார பரிசோதகர்கள், மருத்துவ மாதுக்கள், யாழ்ப்பாண பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் பல்கலைக்கழக மாணவர்கள், தனியார் கல்வி நிறுவன மாணவர்கள் நல்லூர் பிரதேச சபையினர் என பலரும் கலந்து கொண்டிருந்தார்கள்.

இதன்போது டெங்கு நோய் தொடர்பான பதாதைகளும் காட்சிப்படுத்தப்பட்டன. அத்துடன், பொது சுகாதார பரிசோதகர்களால் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் பொது மக்களுக்கும் டெங்கு நோய் தொடர்பான விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களும் வழங்கப்பட்டன. (ஐ)

## யாழ்...

பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் ஹூவர் கலையரங்கத்தில் இந்த மாநாடு நடைபெறவுள்ளது. "நெருக்கடிகளுக்கூடான வழிகள்" என்னும் தொனிப்பொருளில் இந்த மாநாடு வடிவமைக்கப்பட்டுள்ளது.

முதல் நாளான நாளை மறுதினம் சனிக்கிழமை நிகழ்வில் பிரதம விருந்தினராக சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரட்ணம், கௌரவ விருந்தினராக ஐக்கிய நாடுகளின் முன்னாள் நேருதவி செயலாளரும் சிறுவர் மற்றும் ஆயுத முரண்பாடு தொடர்பான செயலாளர் நாயகத்தின் விசேட பிரதிநிதியுமான கலாநிதி ராதிகா குமாரசுவாமி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில், சிறப்பு நிகழ்வாக ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி கனகீஸ்வரன், சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் வாழ்நாள் பேராசிரியர் சொர்ணராஜா ஆகியோரின் திறப்புரைகள் இடம்பெறவுள்ளன.

"இலங்கையில் பகிரங்க சட்டத்தின் எதிர்காலம்: நெருக்கடிகளும் சவால்களும்" என்னும் தலைப்பிலான கலந்துரையாடலும் நடைபெறவுள்ளது.

இரண்டாம் நாளான ஞாயிற்றுக் கிழமை, உயர்நீதிமன்ற நீதிபதி யசந்த கோதாகொட பிரதம விருந்தினராகவும் அரசமைப்பு சட்ட நிபுணர் ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி ஜயம்பதி விக்ரமரட்ண கௌரவ விருந்தினராகவும் பங்கேற்பர்.

இதில், சிறப்பம்சமாக அமெரிக்காவின் யாலே பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத் துறைத் துணைப் பேராசிரியர் ரோஹித் டே, சுரனா மற்றும் சுரனா சர்வதேச வழக்கறிஞர் நிறுவனத்தின் முகாமைத்துவப் பங்காளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான கலாநிதி வினோத் சுரனா ஆகியோர் திறப்புரைகள் ஆற்றவுள்ளனர்.

அத்துடன் "இலங்கையின் பொருளாதார நெருக்கடியிலிருந்து மேலெழுவதற்கான சட்டத்தின் வகிபாகம்" என்னும் தலைப்பிலான கலந்துரையாடலும் நடைபெறும்.

மாநாட்டுக்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வு கட்டுரைகளின் சுருக்கம் இரண்டாம் நாள் நிகழ்வில் ஆய்வாளர்களால் வாசிக்கப்படவுள்ளது.

சமகாலப் பிரச்னைகளை முன்னிறுத்தியதாக பல்வேறு சட்ட விடயங்களை ஆராய்ந்து அதனூடாக இலங்கையின் வட பிராந்தியத்தின் பொருளாதார, சமூக விடயங்களை வினைத்திறனாக அணுகும் தன்மையிலும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள இந்த மாநாட்டில் அனைவரும் பங்கேற்க முடியும் என்று பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்துள்ளது. (ஐ)

## நல்லிணக்க...

மற்றும் நல்லிணக்க பணிமனை சட்டமூலம் நேற்று முதல் சட்டமாக நடைமுறைக்கு வந்தது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைய தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க பணிமனை அமைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## உயிருக்கு...

சிறை கைதிகள் உரிமைகள் மையம் அமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பு தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலினுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது. அதில்,

சாந்தன், கல்லீரல், சிறுநீரக பாதிப்புகளுக்கு உள்ளாகியுள்ளார். அவருக்கு திருச்சி சிறப்பு முகாமில் உரிய சிகிச்சை அளிக்கப்படவில்லை. இதனால், அவரின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது.

எனவே, சென்னை பல்நோக்கு சிறப்பு மருத்துவமனையில் அவருக்கு சிகிச்சை வழங்கவேண்டும்.

சிறுநீரக பாதிப்பால் சாந்தனின் கால்கள் வீங்கியுள்ளன. கல்லீரலும் பாதிக்கப்பட்டுள்ளது. இரு மாதங்களாக அவருக்கு சிகிச்சை வழங்கப்படவில்லை. அவர் உயிருக்கு போராடுகிறார் என்பதால் அவரை காப்பாற்ற வேண்டும் - என்று சிறை கைதிகள் உரிமைகள் மையம் தமிழ்நாடு முதல்வர் ஸ்டாலினை வலியுறுத்தியுள்ளது.

சாந்தன் என்று அறியப்பட்ட சுதேந்திரராஜா இலங்கையை சேர்ந்தவராவார். இவர் இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் 1991 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டார். இந்த வழக்கில் அவர் உட்பட 7 பேருக்கு இந்திய நீதிமன்றம் மரண தண்டனை விதித்தது. பின்னர் அது ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டது. சுமார் 30 வருட சிறை தண்டனையின் பின்னர் தமிழ்நாடு அரசின் பொது மன்னிப்பில் கடந்த 2022 நவம்பரில் விடுதலை செய்யப்பட்டார். எனினும், அவர் திருச்சி சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டுள்ளார். இலங்கை வருதற்காக அவர் கடவுச்சீட்டுக்கு விண்ணப்பித்துள்ளார். எனினும், அவருக்கு கடவுச்சீட்டு வழங்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# 2025ஆம் ஆண்டு முதல் பரீட்சைகள் வழமைக்கு

கொழும்பு, ஜன. 25

2025ஆம் ஆண்டுக்குள் பரீட்சைகளை முறையாக நடத்துவதற்கு தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் கூறினார்.

அத்துடன், உயர்தரப் பரீட்சை எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி நிறைவடையவுள்ள நிலையில், விடைத்தாள்களை திருத்தம் செய்வதற்குத் தேவையான ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த வருட உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களை திருத்தம் செய்யும் ஆசிரியர்கள் மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கு கடந்த வருடம் வழங்கப்பட்ட கொடுப்பனவுகளை வழங்குமாறு அமைச்சுப் பத்திரம் சமர்ப்பித்துள்ளதாகத் தெரிவித்த அமைச்சர், அதற்கான பணிகள் தற்போது இடம்பெற்று வருவதாக மேலும் குறிப்பிட்டார். (அ)


## மரண அறிவித்தல்

தோற்றம் 09 - 04 - 1953

மறைவு 21 - 01 - 2024



### ஆறுமுகம் கிருபநாதன்

அரியாலையைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் கிருபநாதன் கடந்த 21.01.2024 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் – யோகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இரத்தினம் – சரஸ்வதிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும். நிர்மலாதேவியின் அன்புக் கணவரும். ஆறுமுகநாத், யோகநாத், ரட்ணநாத் ஆகியோரின் அன்புத்தந்தையும், Canez வின் மாமனாரும். Adam, Lulna ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடன் 27.01.2024 சனிக்கிழமை 28.01.2024 ஞாயிற்றுக்கிழமை ஆகிய தினங்களில் 15.00 மணி தொடக்கம் 16.00 மணிவரை Cimetière Intercommunal des Joncherolles Villetaneuse. 95 Rue Marcel Sembat, 93430 Villetaneuse என்னும் முகவரியில் பார்வைக்கு வைக்கப்பட்டு, அதே முகவரியில் எதிர்வரும் 31.01.2024 புதன்கிழமை 12.00 மணி முதல் கிரியைகள் இடம்பெற்று, 15.00 மணிமுதல் இறுதி வணக்க நிகழ்வுகள் இடம்பெற்று 16.00 மணிக்கு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல் :
**குடும்பத்தினர்**

தொடர்புகளுக்கு:
**நிர்மலாதேவி( மனைவி) : 0033629525818**
**சோதிலிங்கம் : 0094777706461**
**ராங்கநாதன் : 00447930183698**
**கேசவநாதன் : 00447506807685**
**யோகநாதன் (ரகு) : 00447956350078**
**கமலநாதன் : 004791855828**
**உமாரஞ்சனி : 00447816506588**
**சிறீரஞ்சனி : 00447963159256**


# பொருளாதார பயங்கரவாதிகளாக செயற்படும் ராஜபக்ஷ குடும்பம்!

## சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 25

**யுத்த வெற்றியை காரணம் காட்டி ஆட்சிக்கு வந்த ராஜபக்ஷ குடும்பம் பொருளாதார பயங்கரவாதிகளாக செயற்பட்டு வருவதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தியுள்ளார்.**

ஹொரவ்பதானையில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யுத்த வெற்றியை காரணம் காட்டியே சிங்கள மக்களின் வாக்குகளை பெற்று ராஜபக்ஷ குடும்பம் ஆட்சிக்கு வந்தது. இதன் பின்னர் அவர்கள் பொருளாதார பயங்கரவாதிகளாக செயற்பட்டு நாட்டை அழித்தனர். ஆனால் இன்று பயங்கரவாதிகளை பாதுகாக்கும் ஜனாதிபதியின் நிழலில் ஒழுந்து கொண்டு ராஜபக்ச குடும்பம் சுகபோகங்களை அனுபவித்து வருருகின்றனர். மல உரங்களை கொண்டு வந்து விவசாயத்தை அழித்ததோடு அதிக விலைக்கு நனோ உரங்களை இறக்குமதி செய்து விவசாயத்தை அழித்தனர்.

எனவே இந்த திருட்டு கும்பலைச் சட்டத்தின் முன் நிறுத்தி, திருடப்பட்ட பணத்தை மீண்டும் எமது நாட்டுக்கு நாம் கொண்டு வருவோம். தற்போதைய ரணில்-ராஜபக்ஷ கூட்டணி அரசாங்கத்தின் ஊடாக விவசாயிகள், மீனவர்கள், ஏழைகள், தொழிலாளர்கள், நடுத்தர வர்க்கத்தினர், அரச ஊழியர்கள், தொழில் வல்லுநர்கள் என சகல தரப்பினரும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர். அவர்களை மீட்டு, அனைவருக்கும் சுபீட்சத்தை ஏற்படுத்தும் பொது மக்கள் யுகத்தை உருவாக்கத் தயாராக இருக்கின்றோம்-என்றார். (அ)



# நிகழ்நிலை காப்பு சட்டத்தை எதிர்த்து யாழில் கவனயீர்ப்பு

யாழ்ப்பாணம், ஜன. 25

நிகழ்நிலைக் காப்புப் சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து யாழில் கவனயீர்ப்பு போராட்மொன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு வந்துள்ள உத்தேச நிகழ்நிலைக் காப்புப் சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து யாழ். கிறிஸ்தவ ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்றுக் காலை யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்துக்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

ஜனநாயக உரிமையை பறிக்கும் நிகழ்நிலை காப்பு சட்டமூலத்தை மீளப்பெறு, நாட்டு மக்களை அச்சமூட்டும் நிகழ்நிலை காப்பு சட்டமூலத்தை மீளப்பெறு, சட்டமாக்க வேண்டாம் சட்டமாக்க வேண்டாம் நிகழ்நிலை காப்பு சட்டமூலத்தை சட்டமாக்க வேண்டாம், ஜனநாயகத்தை சிதைக்காதே போன்ற வாசகங்களுடன் கூடிய பதாதைகளை தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இப் போராட்டத்தில் யாழ் கிறிஸ்தவ ஒன்றியத்தின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (அ)

# நேருக்கு நேர் மோதிய 2 டிப்பர்கள்

முல்லைத்தீவு, ஜன. 25

மாங்குளத்துக்கு அண்மையாக ஏ-9 வீதியில் இரண்டு டிப்பர் வாகனங்கள் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

இதன்போது, மோட்டார் சைக்கிளில் வந்த ஆணும், பெண்ணும் படுகாயமடைந்து வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மாங்குளத்துக்கும், கனகராயன் குளத்துக்கும் இடையில் இந்த விபத்து நடந்தது.

மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் மோதுவதை தவிர்ப்பதற்கு டிப்பர் ஒன்று முயன்ற போது, எதிரே வந்த டிப்பருடன் மோதியது.

மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் படுகாயமடைந்து வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (அ)



# நிகழ்நிலை காப்புச் சட்டம் மக்கள் உரிமையை பறிக்கும்

## சபையில் குறிப்பிட்டார் சிறிதரன் எம்.பி.

கொழும்பு, ஜன. 25

நிகழ்நிலை காப்புச் சட்டம் மக்களின் கருத்துச் சுதந்திரம் மற்றும் உரிமைகளை பறிக்கும் வகையில் இருப்பதாக தமிழரசுக் கட்சியின் தலைவரும் பாராளு மன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்றுவரும் நிகழ்நிலை காப்புச் சட்டம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த 80 வருடங்களாக நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகள் காணப்படாமையால்தான் மக்களை ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கும் இவ்வாறான சட்டங்களை கொண்டுவரும் தேவை எழுந்துள்ளது.

இனப்பிரச்னைக்கான தீர்வை நாட்டின் தலைவர்கள் தள்ளிப் போட்டே வந்துள்ளனர். நாட்டின் தலைவராகும் நபர்கள் எதிர்க்கட்சிகளில் இருக்கும்போது ஒன்றையும் ஆளுங்கட்சிக்கு வரும்போது மாற்றி பேசுவதையும் வழக்கமாக கொண்டுள்ளனர்.

சமாதானம் என்பது எமது நாட்டில் இன்னமும் வெகுதூரத்தில்தான் இருக்கிறது. அதனை பெற்றுத்தரக் கூடிய திராணி உள்ள தலைவர்களை மக்கள் இன்னமும் தேடுகின்றனர். மக்களின் கருத்து சுதந்திரத்தைக் கூட பறிக்கும் ஒரு சட்டமாக நிகழ்நிலை காப்புச் சட்டம் உள்ளது.

இது மிகவும் ஆபத்தான சட்டமாக உள்ளது. ஒரு நபரின் ஜனநாயக உரிமையை பறிக்கும் சட்டமாக இது உள்ளது. நாட்டு மக்களின் மீது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்யும் ஒரு சட்டமாகவும் இது உள்ளது. இந்தச் சட்டத்திற்கு கடுமையான எதிர்ப்பை வெளியிடுகிறோம்.

தொலைக்காட்சி மற்றும் வானொளிகளை விட தொலைபேசிகளில் தமது ஈடுபாடுகளை அதிகரித்துள்ள ஒரு இளைய தலைமுறை உருவாகியுள்ளது. 1978ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச்சட்டம் கொண்டுவரப்பட்ட போது இதனை சிங்கள மக்கள் புரிந்து கொள்ளவில்லை.'அறகலய' போராட்டத்தின் பின்னரே இந்தச் சட்டத்தின் கொடூரத்தை அறிந்துக்கொண்டனர். கண்ணை மூடிக்கொண்டு சட்டங்களை அரசாங்கங்கள் கொண்டுவரக் கூடாது. சமாதானத்தை ஏற்படுத்தும் சட்டங்களையே கொண்டுவர வேண்டும்-என்றார்.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 25.01.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



## ஆஸி. ஓப்பன் ரென்னிஸ் அசரென்கா தோல்வி!

மெல்பர்ன், ஜன. 25

அவுஸ்திரேலிய ஓப்பன் ரென்னிஸ் தொடரில் மகளிர் ஒற்றையர் பிரிவின் 4ஆவது சுற்றில் முன்னணி வீராங் கனையான பெலாரஸின் விக்ரோறியா அசரென்கா அதிர்ச்சி தோல்வி அடைந்தார்.

அவுஸ்திரேலியாவின் மெல்பர்ன் நகரில் நடை பெற்று வரும் இந்தத் தொடரில் 8ஆம் நிலை வீராங்கனையான பெலாரஸின் விக்ரோறியா அசெ ரன்கா, 93ஆம் நிலை வீராங்கனையான உக்ரைனின் தயானா யாஸ்ட்ரெம்ஸ்காவை எதிர்த்து விளையாடினார்.

இதில், விக்ரோறியா அசரென்கா 6-7 (6-8), 4-6 என்ற நேர் செற் கணக்கில் தோல்வி அடைந்தார்.

மற்றொரு போட்டியில், 19ஆம் நிலை வீராங்கனை யான உக்ரைனின் எலினா ஸ்விட்டோலினா, செக் குடியரசின் லின்டா நோஸ்கோவாவுடன் மோதினார்.

இதில் லின்டா நோஸ்கோவா முதல் செற்றில்ல் 3-0 என முன்னிலையில் இருந்த போது ஸ்விட்டோலினா காயம் காரணமாக போட்டியிலிருந்து விலகினார். இதனால் லின்டோ நோஸ்கோவா வெற்றி பெற்றார் என்று அறிவிக்கப்பட்டது. இதன் மூலம் அவர், காலிறுதி சுற்றுக்குள் நுழைந்தார். (ஐ)

## ஐ. சி. சியின் டெஸ்ட் அணி; திமுத் கருணாரத்னவுக்கு இடம்!



டுபாய், ஜன. 24

2023ஆம் ஆண்டுக்கான ஆண்கள் டெஸ்ட் கிரிக் கெட் அணியை ஐ. சி. சி. அறிவித்துள்ளது. 2023ஆம் ஆண்டில் டெஸ்ட் கிரிக்கெட்டில் சிறப்பாக செயல் பட்ட வீரர்களை தெரிவு செய்து 2023ஆம் ஆண்டுக் கான டெஸ்ட் கிரிக்கெட் அணியை ஐ. சி. சி. அறிவித் துள்ளது.

இதில், இலங்கையின் திமுத் கருணாரத்னவுக்கு இடம் வழங்கப்பட்டுள்ளது. டெஸ்ட் அணியின் தலை வராக பட் கம்மின்ஸ் அறிவிக்கப்பட்டுள்ளார். அவருடன், இந்த அணியில் 5 அவுஸ்திரேலிய வீரர்கள் இடம் பிடித்துள்ளனர்.

அணி விவரம் -

உஸ்மான் கவாஜா (அவுஸ்திரேலியா), திமுத் கரு ணாரத்ன (இலங்கை), கேன் வில்லியம்சன் (நியூஸி லாந்து), ஜோ ரூட் (இங்கிலாந்து), டிராவிஸ் ஹெட் (அவுஸ்திரேலியா), ரவீந்திர ஜடேஜா (இந்தியா), அலெக்ஸ் கேரி (விக்கெட் காப்பாளர், அவுஸ்தி ரேலியா), பேட் கம்மின்ஸ் (அணித் தலைவர் - அவுஸ்தி ரேலியா), ரவிச்சந்திர அஸ்வின் (இந்தியா), மிட்செல் ஸ்ரார்க் (அவுஸ்திரேலியா), ஸ்ருவர்ட் பிரொட் (இங்கிலாந்து).

### இங்கிலாந்துடனான தொடர்:

# இரு போட்டிகளிலிருந்து விராட் கோலி விலகல்!

புதுடில்லி, ஜன. 25

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரின் முதலிரு போட்டிகளில் இருந்து இந்திய துடுப்பாட்ட வீரர் விராட் கோலி விலகியிருக்கிறார். தனிப்பட்ட காரணங்களுக்காக அவர் அந்த முடிவை எடுத்தாரென இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை தெரிவித்துள்ளது.

தனது முடிவு குறித்து அணித் தலைவர் ரோஹித் சர்மா மற்றும் அணி நிர்வாகத்துடன் கோலி ஆலோசித்தாரெனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. சமீபத்தில் ஆப்கா னிஸ்தானுக்கு எதிரான இருபது - 20 தொடரின் முதல் போட்டியி லும் இதேபோல் தனிப்பட்ட காரணங்களுக்காக பங்கேற்காமல் கோலி தவிர்த்திருந்தார்.

இதனிடையே, கோலிக்கு பதிலாக இங்கிலாந்துடனான முதலிரு டெஸ்ட்டுகளுக்கு ரஜத்



பட்டிதர் அல்லது சர்ப்ராஸ் கான் ஆகியோரில் ஒருவர் தெரிவாக வாய்ப்புள்ளது. அத்துடன், மூத்த வீரரான செதேஷ்வர் புஜாராவை இணைப்பது தொடர்பாக பேச்சு நடைபெற்று வருவதாகவும் கூறப்படுகிறது.

உத்தியோகபூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும். (ஐ)

## எஸ். ஏ. ரி - 20 தொடர் சன்ரைசர்ஸ் வெற்றி!



கேப்டவுன், ஜன. 25

தென்னாபிரிக்காவில் 'எஸ்.ஏ. ரி - 20' கிரிக்கெட் லீக் தொடர் கடந்த ஆண்டு அறிமுகமானது. ஐ. பி. எல். பாணியில் நடத்தப்படும் இந்த போட்டி தொடரின் முதலாவது பரு வத்தில் சன்ரைசர்ஸ் ஈஸ்டன் கேப் அணி சம்பியன் கிண்ணத்தை வென் றது.

இந்த தொடரில் நேற்று நடை பெற்ற 15ஆவது லீக் போட்டியில் நடப்பு சம்பியன் சன்ரைசர்ஸ் ஈஸ்டன் கேப் மற்றும் பிரிட்டோ ரியா கப்பிட்டல்ஸ் அணிகள் மோதின. இதில், நாணயச் சுழற்சி யில் வென்ற சன்ரைசர்ஸ் அணி பந்துவீச்சை தெரிவ செய்தது. அதன்படி முதலில் துடுப்பெடுத்தா டிய பிரிட்டோரியா கப்பிட்டல்ஸ் அணியின் துடுப்பாட்ட வீரர்கள் சன்ரைசர்ஸ் பந்துவீச்சாளர்களின் அபார பந்துவீச்சை சமாளிக்க முடி யாமல் அடுத்தடுத்து ஆட்ட மிழந்தனர்.

வெறும் 13.3 ஓவர்கள் மட்டுமே தாக்குப்பிடித்த பிரிட்டோரியா கப் பிட்டல்ஸ் 52 ஓட்டங்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து சகல விக்கெட்களையும் இழந்தது.

எஸ்.ஏ. 20 ஓவர் லீக் வரலாற்றில் ஓர் அணியின் குறைந்தபட்ச ஓட்ட மாக இது பதிவாகியுள்ளது. அந்த அணியில் சால்ட் மற்றும் வில் ஜாக்ஸ் தவிர மற்ற வீரர்கள் யாரும் இரு வரிசை இலக்கத்தைக்கூட தொடவில்லை.

சன்ரைசர்ஸ் அணியில் அதிக பட்சமாக ஒட்னியல் பார்ட்மேன் 4 விக்கெட்கள் வீழ்த்தி அசத்தினார்.

இதனையடுத்து 53 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற எளிதான இலக்குடன் களமிறங்கிய சன்ரை சர்ஸ் 6.5 ஓவர்களிலேயே ஒரு விக்கெட்டை மட்டுமே இழந்து இலக்கை எட்டி அபார வெற்றி பெற்றது.

## ஆஸி. ஓப்பன் ரென்னிஸ் அல்காரஸ் காலிறுதியில்!

மெல்பர்ன், ஜன. 24


கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற ஆஸி. ஓப்பன் ரென்னிஸ் தொடரில் அல்காரஸ் காலிறுதி போட்டிக்கு முன்னேறியுள்ளார்.

அவுஸ்திரேலிய ஓப்பன் ரென்னிஸ் தொடர் மெல்பர்னில் நடைபெற்று வருகிறது. பல முன் னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ள இந்தப் போட்டி, வருகிற 28ஆம் திகதி வரை நடக்கவுள் ளது. தொடர் தற்போது விறுவிறுப்பான கட் டத்தை எட்டியுள்ளது.

இந்நிலையில் இந்த தொடரில் நேற்று நடை பெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவின் 4ஆவது சுற்று ஆட்டத் தில் முன்னணி வீரரான ஸ்பெயினை சேர்ந்த கார்லஸ் அல்காரஸ் சேர்பியாவின் மியோ மிர் கெக்மனோ விக்கை எதிர்கொண்டார்.

இந்த ஆட்டத்தில் ஆரம்பம் முதலே அபார மான ஆட்டத்தை வெளிப்படுத்திய அல்காரஸ் 6-4, 6-4, 6-0 என்ற நேர் செற் கணக்கில் மியோமிர் கெக்மனோ விக்கை வீழ்த்தி காலிறுதிக்கு முன் னேறினார்.

அல்காரஸ் காலிறுதி போட்டியில் ஜேர்மனி யின் அலெக்சாண்டர் ஸ்வெரேவை எதிர்கொள்கிறார்.



# ஹவுதி மீது பலநாடு கூட்டுத் தாக்குதல்: ஈரான் - சவுதியின் திரை மறைவு போர்!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

யேமனில் உள்ள ஹவுதிகளுக்கு எதிராக பல இடங்களில் பல நாடுகள் ஒன்றிணைந்து கடந்த வாரம் வான் தாக்குதல்களை நடத்தியுள்ளன.

இந்நிலையில் குறித்த தாக்குதலுக்கு கடுமையான பதிலடி கொடுக்கப்படும் என ஹவுதிகள் எச்சரித்தனர்.

அவுஸ்திரேலியா, பஹ்ரைன், கனடா மற்றும் நெதர்லாந்தின் ஆதரவுடன் அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து போர் விமானங்கள், போர்க்கப்பல்கள் மற்றும் நீர்மூழ்கிக் கப்பல்கள் கடந்த வெள்ளிக்கிழமை (12ஆம் திகதி) காலை கூட்டாக இந்த தாக்குதலை மேற்கொண்டன.

யேமன் உள்நாட்டுப் போர் சவுதி தலைமையில் அதன் கூட்டணிக்கும் யேமனிலுள்ள ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கு இடையில் நடந்து வருகிறது.

இதில் சவுதி அரேபியாவை எதிர்க்கும் ஈரான் நாடு, ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கு ஆதரவு தெரிவித்து வருகிறது. அமெரிக்கா இதில் சவுதி அரேபியாவுக்கு ஆதரவளித்து வருகிறது. இருப்பினும், இது மறைமுகமாக ஈரான் மற்றும் சவுதி அரேபியாவுக்கு நடக்கும் போராகவே கருதப்படுகிறது.

**யேமன் உள்நாட்டுப் போர்**

1990-ம் ஆண்டிலிருந்து யேமன் அதிபராக அலி அப்துல்லா சலே இருந்தார். 2011ஆம் ஆண்டு நடைபெற்ற ‘அரபு வசந்தம்’ என்று கூறப்படும் அரபு நாடுகளில் ஏற்பட்ட புரட்சிக்குப் பிறகு ஆட்சியிலிருந்து அவர் நீக்கப்பட்டார். பின்பு சவுதி அரேபியா மற்றும் வளைகுடா நாடுகள் ஒத்துழைப்பு கவுன்சிலின் முயற்சியில் புதிய அதிபராக மன்சூ ஹடி யேமனில் பதவியேற்றார்.

அதேசமயம், தாங்கள் ஓரங்கட்டப்படுவதாக யேமனிலுள்ள ஹவுதி கிளர்ச்சியாளர்கள் நினைத்தார்கள். யேமனில் நடைபெற்ற புரட்சியில் பங்கேடுத்து, சலேவின் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கான முக்கியக் காரணமாக இருந்தவர்கள் இவர்கள் ஆவர்.

2014-ம் ஆண்டு புதிய அதிபரான ஹடிக்குப் போர்க்கொடி தூக்கிய ஹவுதி கிளர்ச்சியாளர்கள், முன்னாள் அதிபர் சலேவுடன் சேர்ந்து யேமன் தலைநகர் சனாவைக் கைப்பற்றினார்கள். அப்போது அதிபராக இருந்த ஹடி, சவுதி அரேபியாவுக்குத் தப்பிச் சென்றார். இங்கிருந்துதான் தொடங்கியது யேமன் உள்நாட்டுப் போர்.

**சவுதி தலைமையிலான படைகள்**

இதற்கு பிறகு ஹவுதி கிளர்ச்சியாளர்கள் ஒருபுறமும், யேமன் அரசுக்கு ஆதரவாக சவுதி தலைமையிலான படைகள் ஒருபுறமும் யேமனில் போரிட்டுவருகின்றனர்.

இந்தப் போர் மத்திய கிழக்கின் மிக ஏழ்மையான நாடாக யேமனை பாரிய அளவில் மாற்றியிருக்கிறது.



இது யேமனில் நடக்கும் போர் என்றாலும், திரை மறைவில் இது ஈரானுக்கும் சவுதிக்கும் இடையே நடைபெறும் போராகவே பலர் கருதுகின்றனர். பொது சமபலத்தில் இருக்கும் இருவருக்கும் ஓர் அதிகார சண்டையாகக்கூட இதைப் பார்க்கலாம். அடிப்படையில், சவுதி அரேபியாவுக்கும் ஈரானுக்குமான போர் என்பது மத்திய கிழக்கில் யார் ஆதிக்கம் செலுத்துவது என்ற போட்டியே.

அந்தப் பிராந்தியத்தில் இருபெரும் எதிரி நாடுகளாக சவுதி அரேபியாவும், ஈரானும் இருக்கின்றன. இரு நாடுகளிலும் எண்ணெய் வளம் நிறைந்திருக்கிறது. இந்த இரு நாடுகளுக்கு இடையேயுள்ள இந்த மோதல் தன்மைக்கு இரு நாடுகளிலுமுள்ள மதப் பிரிவும் காரணம்.

ஈரானில் ஷியா முஸ்லிம்கள் பெரும்பான்மையாக உள்ளனர். சவுதியில் சுன்னி முஸ்லிம்கள் பெரும்பான்மையாக உள்ளனர்.

**சவுதி - ஈரான் மதப் பிரிவு**

அரச குடும்பத்தால் ஆளப்படும் சவுதி அரேபியாவில் இஸ்லாம் பிறந்ததாகக் கூறப்படுகிறது. உலக அளவில் எண்ணெய் ஏற்றுமதியில் முன்னணியில் இருக்கும் ஒரு நாடு. முஸ்லிம் நாடுகளின் அரசன் தான்தான் என்ற நினைப்பில் இருந்த சவுதி அரேபியாவுக்கு 1979-ம் ஆண்டு ஈரானில் நடைபெற்ற இஸ்லாமியப் புரட்சி சவாலாக அமைந்தது.

இந்த இஸ்லாமியப் புரட்சி என்பது, ஈரானில் ஆட்சி செய்துவந்த பஹலவி அரச ராஜ்ஜியத்துக்கு எதிராக நடைபெற்றது.

அந்தப் புரட்சியில் ராஜாங்க அரசு தூக்கியெறியப்பட்டு, ஈரானின் அதிஉயர் தலைவர் என்று அழைக்கப்



படும் அயதுல்லா கொமேனியின் தலைமையில் இஸ்லாமியக் குடியரசு ஆட்சி அமைந்தது. புதிதாக அமைந்த அயதுல்லா கொமேனியின் அந்த ஆட்சி தனது எல்லைகளைத் தாண்டியும் அதை விரிவுப்படுத்த வேண்டும் என்ற கொள்கையை வெளிப்படுத்தியது.

**சவுதியின் கூட்டாளி அமெரிக்கா**

யேமன் போரில் சவுதி, ஈரானுக்கு அடுத்தபடியாக முக்கியப் பங்குவகிக்கும் நாடு அமெரிக்கா. சவுதி அரேபியாவும் அமெரிக்காவும் நட்பு நாடுகள். இதை, “எரிக்கு எதிரி நண்பன்” என்ற சொல்லடைக்கு ஏற்பப் பொருத்திப் பார்க்கலாம். ஆம், இரு நாடுகளுக்கும் எதிரியாக இருப்பது ஈரான். அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையேயான நீண்ட விரிசல் என்பது 1953ஆம் ஆண்டில் தொடங்கியது.

ஈரானில் 1953ம் ஆண்டில் மக்களால் தேர்வுசெய்யப்பட்ட பிரதமர் முகமது மொசாடக், எண்ணெய் வளத்தை தேசியமயமாக்க நினைத்தபோது அவரின் ஆட்சியைக் கவிழ்த்து முகமது ரெசா ஷாவுக்கு ஆதரவாக இருந்து ஷாவை பதவியில் அமரச் செய்தது அமெரிக்கா மற்றும் பிரிட்டன். அதன் பிறகு 1979ஆம் ஆண்டில் நடைபெற்ற ஈரான் புரட்சி வரை ரெசா ஷாதான் அங்கு ஆட்சியில் இருந்தார்.

**ஹவுதி கிளர்ச்சியாளர்கள் உருவாக்கப்பட்டதன் காரணமே சவுதி அரேபியா - ஈரான் இடையிலான திரை மறைவில் எழுந்த ஆதிக்கப்போராகும்**

சமீபத்தில்கூட ஈரான் புரட்சிகர ராணுவத் தலைவர் காசெம் சுலேமானி அமெரிக்காவால் கொல்லப்பட்டார். இது இரு நாடுகளுக்கும் இடையேயான பதற்றத்தை அதிகரித்ததோடு போர் ஏற்படுமோ என்ற அச்சத்தையும் கூட்டியிருந்தது குறிப்பிடத்தக்கது.

**செங்கடலில் கப்பல்களுக்குக் குறி**

இஸ்ரேல் ராணுவம்-காஸாவின் ஹமாஸ் ஆயுதக் குழு இடையிலான போர் அக்.7-ஆம் தேதி தொடங்கியதிலிருந்து இந்த விவகாரத்தில் பேசுபொருள் ஆகியிருக்கும் மற்றொரு அமைப்பு அதன் ஹவுதி. செங்கடலில் இஸ்ரேலை நோக்கிப் பயணிக்கும் அல்லது இஸ்ரேலிலிருந்து பயணிக்கும் சரக்கு கப்பல்களைக் குறிவைத்து தாக்குதல் நடத்திவருவதன் மூலம் உலக நாடுகளை கவலைகொள்ளச் செய்திருக்கும் இந்த ஹவுதி கிளர்ச்சியாளர்கள்.

உலகின் பிரதான கிழக்கு - மேற்கு வர்த்தக வழித்தடமாக செங்கடல் அமைந்துள்ளது. இந்தச் செங்கடலில் வர்த்தக கப்பல்கள் மீது ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தி வருவதன் மூலம் சூயல் கால்வாயை அணுகுவது பெரும் ஆபத்தாக மாறியுள்ளது. சூயஸ் கால்வாய் வழியாக ஆசியாவுடன் ஐரோப்பாவையும், வட அமெரிக்காவையும் இணைக்கும் முக்கிய வர்த்தகப் பாதையை ஹவுதி அமைப்பினர் சீர்குலைத்துள்ளனர். இந்தப் பாதையையே பல கப்பல்கள் தவிர்க்கத் தொடங்கியுள்ள நிலையில், சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை உயர்வுக்கும் வழிவகுத்துள்ளது.




**ஹவுதியின் தாக்குதல்**

செங்கடலின் தெற்குப் பகுதியில் குறுகிய பகுதியாகக் காணப்படும் பாபெல்-மாண்டேப் நீரிணையே ஹவுதி கிளர்ச்சியாளர்களின் முக்கியமான தாக்குதல் பகுதியாகும். இந்தப் பகுதியைக் கடக்கும் சரக்கு கப்பல்கள் மீது ராக்கெட் தாக்குதல், ட்ரோன் தாக்குதல் உள்ளிட்ட தாக்குதல்களை ஹவுதி அமைப்பினர் நடத்தி வருகின்றனர். நவ. 19-ஆம் தேதி பிரிட்டனைச் சேர்ந்த ‘கேலக்ஸி லீடர்’ என்ற சரக்கு கப்பலை முதல் முறையாக ஹவுதி அமைப்பினர் செங்கடலில் கைப்பற்றினர்.

இதன்பின் டிசம்பர் 23-ஆம் தேதி செங்கடலில் நோர்வே மற்றும் இந்திய தேசியக் கொடிகளுடன் சென்றுகொண்டிருந்த இரு எண்ணெய் டேங்கர் கப்பல்கள் மீது ஹவுதி அமைப்பினர் ட்ரோன் மூலம் தாக்குதல் நடத்தினர். இதில் யாருக்கும் காயம் இல்லை. இஸ்ரேல்-ஹமாஸ் போர் தொடங்கியதிலிருந்து ஹவுதி அமைப்பால் 15 கப்பல்கள் தாக்குதலுக்கு உள்ளாகி உள்ளன.

யேமனில் அதிகாரபூர்வ அரசுக்கு எதிராகச் செயல்பட்டு வரும் ஆயுதக் குழு ஹவுதி. ஷியா பிரிவைச் சேர்ந்த இந்த ஆயுதக் குழுவானது யேமனின் பெரும்பான்மை சுன்னி அரசுக்கு எதிராக உள்நாட்டுப் போரில் ஈடுபட்டுள்ளது.

1990-இல் அப்போதைய யேமன் அதிபர் அலி அப்துல்லா சலேயின் ஆட்சி மீது ஊழல் குற்றம்சாட்டி, ஆட்சிக்கு எதிராகப் போராடுவதற்காக ஹவுதி அமைப்பு தொடங்கப்பட்டது. அந்த அமைப்பை நிறுவிய ஹூசைன் அல் ஹூதியின் பெயரே அமைப்புக்கும் சூட்டப்பட்டது.




யேமனின் அதிகாரபூர்வ அரசுக்கு சவூதி ஆதரவு அளித்துவரும் சூழலிலும், 2014-இல் தலைநகர் சனாவை ஹூதி படையினர் கைப்பற்றினர். அதைத் தொடர்ந்து அப்போதைய அதிபர் அப்தரப் மன்சூர் ஹாதி, யேமனை விட்டு வெளியேறி சவூதி அரேபியாவில் தஞ்சமடைந்தார்.

இப்போது யேமனின் அதிகாரபூர்வ அரசு, சவூதி அரேபியா தலைநகர் ரியாத்திலிருந்துதான் செயல்பட்டு வருகிறது. யேமன் தலைநகர் மட்டுமன்றி, வடக்கு யேமன், செங்கடல் கடலோரப் பகுதிகளும் ஹவுதியின் கட்டுப்பாட்டில் உள்ளன.

**ஈரான் ஆதரவு பெற்ற ஹவுதிக்கள்:**

ஈரான் ஆதரவு பெற்ற ஹவுதிக்கு எதிராக சவூதி அரேபியா ராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறது. ஈரானுக்கும் சவூதி அரேபியாவுக்கு இடையிலான மறைமுகப் போராகவே கருதப்படுகிறது. 2009, நவம்பரில் சவூதி அரேபியாவுக்குள் ஊடுருவி தாக்குதல் நடத்தினர் ஹவுதி கிளர்ச்சியாளர்கள்.

அதுமுதல்தான் ஹவுதிக்கு எதிராக தீவிரமாகக் களமிறங்கியது சவூதி அரசு. ஹவுதிக்கும், சவூதி ஆதரவு அரசுப் படைக்கும் இடையிலான சண்டையில் லட்சக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர்.

ஈரான் தொழில்நுட்ப மற்றும் நவீன ஆயுத உதவிகளை அளிப்பதால்தான் செங்கடலில் கப்பல்களை மிகச்சரியாகக் கண்காணித்து ட்ரோன் மற்றும் ராக்கெட் தாக்குதலை ஹவுதி அமைப்பினர் நடத்த முடிகிறது என அமெரிக்கா குற்றஞ்சாட்டியுள்ளது. ஆனால், இந்தக் குற்றச்சாட்டை ஈரான் மறுத்துள்ளது.

ஹவுதியின் தாக்குதலுக்குப் பதிலடி கொடுக்கும் வகையிலும், செங்கடல் பிராந்தியத்தில் கப்பல்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையிலும் சர்வதேச கடல் பாதுகாப்பு நடவடிக்கையை அமெரிக்கா தொடங்கியுள்ளது. பிரிட்டன், கனடா, பிரான்ஸ், ஸ்பெயின், பஹ்ரைன், நோர்வே ஆகிய நாடுகளும் இதில் பங்கேற்றுள்ளன. ஆனாலும், செங்கடல் தாக்குதலைத் தொடரப் போவதாகக் கூறியுள்ளது ஹவுதி அமைப்பினர்.

# தைப்பூச நீராடலால் பொலிவுறும் உலகு

ஆ.இளங்கோ
டச்சு வீதி,
அளவெட்டி.



தமிழர்களால் கொண்டாடப்பட்டு வரும் பல்வேறு கொண்டாட்டங்கள், பாரம்பரிய விழாக்களில் ஒன்றாகவே தைபூசவிழாவும் அமைகின்றது.

தைப்பூசம் ஆண்டுதோறும் தை மாதம் (தமிழ் பஞ்சாங்கப்படி பத்தாவது மாதம். ) பூச நட்சத்திரமும் பௌர்ணமி திதியும் கூடி வரும் நன்நாளில் முருகனுக்கு எடுக்கப்படும் முக்கிய விழாவாகவும் விளங்குகின்றது

இவ்வாண்டு(2024) ஜனவரி 25 ஆம் திகதி அதாவது சோபகிருது வருடம் தை மாதம் பதினோராம் நாள் தைபூச நாளாக அமைகின்றது.

ஒவ்வொரு மாதத்தின் முழு நிலவு நாளும், அன்றைய நட்சத்திரமும் புனிதமாக கொண்டாடப்படுவது பண்டைய தமிழர் வழக்கம். அந்தந்த மாதத்தின் முழுநிலவு நாளின் நட்சத்திரத்தின் பெயரில் மாதம் அழைக்கப்படுகிறது. தைமாதத்தின் பெயர் பூச மாதம் எனவும் சொல்லப்படுகிறது.

தொன்றுதொட்டு தைப்பூசத் திருநாளில் முருகப்பெருமானை வழிபடும் வழக்கம் இருந்து வந்துள்ளது சங்க இலக்கியத்திலேயே முருகன் வழிபாடு பற்றிய தகவல்கள் காணப்படுகின்றன. சோழர்கள் காலத்து தைப்பூச விழாக்கள் பற்றி கல்வெட்டுகளிலும் காணப்படுகின்றன,.

தேவாரம் பாடிய மூவருள் அப்பரும், சம்பந்தரும் இந்தத் தைப்பூச விழாவை தங்கள் தேவாரப் பதிகங்களில் குறிப்பிட்டுள்ளனர்.

"வருந்திய மாதவத்தோர் வானோர்
ஏனோர் வந்தீண்டிப் பொருந்திய
தைப்பூசமாடி உலகம்
பொலிவெய்த"

என்ற திருஞானசம்பந்த நாயனார் பாடிய தேவாரத்தின் மூலம் சுமார் 1500 ஆண்டுகளுக்கு முன்னரே தைப்பூசம் கொண்டாடப்பட்டுள்ளது என்பது தெளிவாகின்றது.

மேலும் பூசத் துறை (தைமாதம்) பூச நாளிலே மருதவாணர் தீர்த்தமாடும் திருக்காவிரித்துறை என்பதனை

"பூசம் புகுந்தாடி பொலிந்தழ காய
ஈசனுறைகின்ற இடைமரு தீதோ"

எனத் திருஞான சம்பந்தப்பெருமான் தேவாரப் பதிகத்திலும்

ஈசன் எம்பெருமான் திருவடியை வழிபட்டு வைகுதலைக் கண்டு, புனலாடயாமும் பூசத்திருநாளில் அங்குப் புகுந்து வழிபடுவோம் என்பதனை

"ஈசனெம்பெரு மானிடை மருதினில்
பூச நாம்புகு தும்புன லாடவே"

எனத் திருநாவுக்கரசு நாயனார் தேவாரப் பதிகத்திலும் காணக்கூடியனவாக உள்ளன.

திருஞானசம்பந்தரின் மயிலாப்பூர்ப் தேவாரப் பதிகத்தில்அரவம் தீண்டி உயிர்நீத்த பூம்பாவையை நோக்கி நெய்யொழுகும் சிறந்த பொங்கல் படைத்துக் கொண்டாடும் தைப்பூச விழாவைக் காணாது செல்வது முறையோ? என வினவுவதாகப் பாடியுள்ளார்

"நெய்ப் பூசும் ஒண் புழுக்கல்
நேரிழையார் கொண்டாடும்
"தைப்பூசும் காணாதே போதியோ
பூம்பாவாய்.."

தைப்பூசநாளில் தான் பூம்பாவையை சம்பந்தர் தேவாரம் பாடி உயிர்பெற வைத்தார்.

தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் இடையே ஏற்பட்ட போரில் தேவர்களால் அசுரர்களை வெல்ல முடியாத நிலையில், தேவர்களுக்கு பல்வேறு இன்னல்கள் கொடுத்து வந்த அசுரர்களை அழிக்க வேண்டி சிவபெரு மானிடம் தேவர்கள் முறையிட்டனர். கருணைக் கடலாம் சிவபெருமான், தேவர்களின் முறையீட்டை ஏற்று உருவாக்கிய அவதாரமே முருகன்.

சூரனை அழிக்கப் பார்வதி தன் சக்தி, ஆற்றல் அனைத்தையும் திரட்டி ஒன்று சேர்த்து வேலாக மாற்றி அந்தச் சக்தி வேலை முருகனுக்கு அளித்த அந்தநாளும் தைப்பூசநாளாகும்.

அந்த ஞானவேல் கொண்ட கந்தன் அசுரர்களை வதம் செய்து தேவர்களை காத்து அருளினார். இதனை நினைவு கூறும் தினமாகவே இந்த தைப்பூசம் கொண் டாடப்படுகின்றது.

பூச நாளில் 'வேலன் வெறியாட்டு' என்ற முருக வழிபாடு, ஆண், பெண் என்ற இருபாலரும் வேல் பிடித்து ஆடிய செய்திகளை சங்கத் தமிழ் தகவல்கள் கூறுகின்றன .தைப்பூச நன்னாளில் வேல் வழிபாடு செய்வது மிகுந்த நன்மைகளை அளிக்கும்

தைப்பூசம் அன்று தான் உலகம் தோன்றியது எனவும்,உலகத்தின் முதல் உயிர்ப்பு சக்தியான தண்ணீர், சிவனால் தோன்றியதெனவும். அதன் தொடர்ச்சியாக நிலம், ஆகாயம், நெருப்பு, காற்று ஆகியவையும், அடுத்தடுத்து அனைத்து உயிரினங்களும் தோற்றுவிக்கப்பட்டதென்றும் சில புராணங்கள் இந்நாளுக்குரிய சிறப்பாக கூறுகின்றன

இந்தவகையில் தைப்பூசம் மிகவும் சுபிட்சமான நாள் என்பது நம்பிக்கை. எனவே அன்று தொடங்கும் நல்ல காரியங்கள் எதுவானாலும் சிறந்த பலனைக் கொடுக்கும் என்பது தொன்று தொட்டு வரும் நம்பிக்கையாக விளங்குகின்றது.

"தைப்பூச திருநாளில் தொட்டதெல்லாம் துலங்கும்" எனும் பழமொழிக் கேற்ப அன்றைய தினம் பெண் குழந்தைக்கு காது, மூக்கு குத்துதல், ஏடு தொடக்குதல், திருமணப் பேச்சுக்கள் ஆரம்பித்தல், ஒப்பந்தங்கள் செய்தல் போன்ற நற்செயல்கள் மேற்கொள்ளப் படுகின்றன..

ஈழத்தமிழ்மக்கள் தைப்பூசத்தினத் தில் தான் புதிர் எடுக்கும் வைபவத்தை யும் கொண்டாடுகின்றனர். .. வயலுக்குச் சென்று கிழக்கு முகமாக நின்று சூரி யனை வணங்கி ஒருவர் தேங்காய் உடைக்க மற்றவர் முற்றிய புது நெற்கதிர் சிலவற்றை அறுத்து வீட்டிற்கு எடுத்து வந்து. அதனைக் குடும்பத்தலைவியிடம் கொடுத்து சுவாமி அறையில் வைப்பர். . அதில் இருந்து சில நெல்மணிகளை. அவர்கள் அரிசியாக்கி வீட்டிலுள்ள அரிசியையும் கலந்து அன்றைய மதிய உணவு ஆக்கி உண்ணும் வழக்கம் கொண்டவராகவும் உள்ளனர்..

தைப்பூசம் சிவபெருமானுக்கும், முருக பெருமானுக்கும் விசேஷமான தினமாகும். தைப்பூசம் அன்று அதி காலையில் எழுந்து குளித்துவிட்டு முருகனை வழிபட்டு விரதத்தை ஆரம்பித்தல் வேண்டும். "வருந்திய மாதவத்தோர் வானோர் ஏனோர் வந்தீண்டிப் பொருந்திய தைப்பூசம் ஆடி உலகம் பொலிவெய்த"என்ற தேவார பதிகமூலம் உலகம் தைப்பூச நீராடலால் தோசங்கள் நீங்கி, பொலிவு பெறுகிறது என்பது உணர்த்தப்பட்டுள்ளது.

வீட்டில் விளக்குகளை ஏற்றிவைத்து முருகப்பெருமானை வழிபட்டு கந்த சஷ்டி கவசம், கந்தர் அலங்காரம், திருமுருகாற்றுப்படை, திருப்புகழ், கந்தர் அனுபூதி போன்ற முருகப்பெருமானுக்கு உகந்த பாடல்களை காலையில் இருந்து மாலை வரை படித்தல் மற்றும் காலை மற்றும் மதியம் ஆகிய வேளைகளில் மட்டும் பழங்களை உண்ணுதல் போன்றவாறு விரதத்தை கைக்கொள்ள வேண்டும். இவற்றை செய்யஇயலாதவர்கள்" ஓம் சரவணபவா " என்ற மத்திரத்தை இடைவிடாது உச்சரித்து முருகனை நினைந்து வழிபடவேண்டும் எனவும் சொல்லப்படுகின்றது.

தைப்பூச நாளன்று முருகனை வழிபட்டு ,விரதமிருந்து, காவடி எடுத்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுவதனால் எந்த வித தீய சக்திகளும், எம்மை நெருங்காது எனவும் வாழ்க்கையில் காணப்படுகின்ற பல்வேறு துன்பங்கள் அனைத்தும் அகன்று, ஆரோக்கியமான, வறுமையற்ற, நோயற்ற வாழ்வினையும் பெற்றுக் கொள்வதற்குமான வாய்ப்பு கிடைப்பதாகவும் கருதப்படுகின்றது.

ஈழத்தமிழரும் தமக்கெதிரான அசுர சத்திகளின் இன்னல்கள், தடைகளிலிருந்து வெற்றிபெற்று சிறப்பாக வாழ தைப்பூசத்திருநாளில் பக்திபூர்பமான வழிபாடுகளை மேற்கொண்டு உரிய சிறப்புக்களைப் பெற்று பொலிவுறலாம்.






DAN news
27ம் திகதி முதல்
மேல் மாகாணம் எங்கும்
DAN நிவ்ஸ்
24X7
27ம் திகதி முதல்
UHF-22
அலைவரிசையில்
முதலாவது இருமொழி செனல்